வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 23.05.2023 செவ்வாய்க்கிழமை | இதழ் : 165 | பக்கங்கள் : 16




# மாகாண அதிகாரங்கள் மத்திக்கு செல்லக்கூடாது!

## ஆளுநரிடம் வலியுறுத்தினார் சார்ள்ஸ் எம்.பி.



**யாழ்ப்பாணம், மே 23**

**“வடக்கு மாகாணத்தின் முழுமையான அதிகாரங்கள் மத்திய அரசாங்கத்திடம் செல்லாதபடி புதிய ஆளுநர் பார்த்துக் கொள்ள வேண்டும்” என்று இலங்கை தமிழரசு கட்சியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இ. சார்ள்ஸ் நிர்மலநாதன் வலியுறுத்தியுள்ளார்.**

வடக்கு மாகாணத்தின் புதிய ஆளுநராக பி. எஸ். எம். சார்ள்ஸ் நேற்று திங்கட்கிழமை கடமைகளை பொறுப்பேற்றார். இந்த நிகழ்வில் கலந்து கொண்ட பின்னர் செய்தியாளர்களை சந்தித்தபோதே சார்ள்ஸ் நிர்மலநாதன் மேற்கண்டவாறு கூறினார்.

“கடந்த காலங்களில் பி. எஸ். எம். சார்ள்ஸ் பணியாற்றியபோது பல்வேறுபட்ட வேலைத் திட்டங்களை முன்னெடுத்திருந்தாலும் அதனை நடைமுறைப்படுத்துவதற் குரிய சந்தர்ப்பங்கள் குறைவாக இருந்தன.

14



## சட்டவிரோத விகாரைகளை எதிர்க்க மகாநாயக்கர்கள் முன்வரவேண்டும்

### தையிட்டியில் மீளவும் போராட ஆரம்பித்த தமிழ் தேசிய மக்கள் முன்னணி அழைப்பு

யாழ்ப்பாணம், மே 23

“எமது நிலங்களை அபகரித்து சட்டவிரோதமாக அமைக்கப்படும் விகாரைகளையே நாம் எதிர்க்கிறோம். எமது போராட்ட நியாயங்களை அஸ்கிரிய, மல்வத்து பீடங்களின் மகாநாயக்கர்கள் புரிந்து கொண்டு - சட்டவிரோத கட்டுமானங்களுக்கு எதிராக எம்முடன் இணைந்து போராட முன்வர வேண்டும்.

- இவ்வாறு அழைப்பு விடுத்துள்ளார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பேச்சாளர் க. சுகாஷ்.

14

## சம்பிக்கவின் புதிய கட்சி நேற்று உதயம்!

கொழும்பு, மே 23

பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவின் தலைமையில் ‘ஐக்கிய குடியரசு முன்னணி’ என்ற அரசியல் கட்சி உதயமாகியுள்ளது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்ற கேட்போர் கூடத்தில் இந்தக் கட்சிக்கான அங்குரார்ப்பண நிகழ்வு நடைபெற்றது.

இதில், பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மதத் தலைவர்கள் பங்கேற்றனர். (ஐ)

## துப்பாக்கி சூட்டு சம்பவங்களால் 24 மணிநேரத்தில் மூவர் மரணம்!

### அச்சத்தில் தென்னிலங்கை

கொழும்பு, மே 23

தென்னிலங்கையின் வெவ்வேறு இடங்களில் நேற்று திங்கட்கிழமை இரவு வரையான 24 மணி நேரத்தில் துப்பாக்கி சூட்டு சம்பவங்களில் மூவர் உயிரிழந்தனர்.

நேற்று பிற்பகல், கம்பஹா மாவட்டத்தின் மினுவாங்கொடை பொலிஸ் பிரிவில் ஓட்டோ சாரதி ஒருவர் துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகி பலியானார்.

ஓட்டோவைச் செலுத்தி சென்றவர்மீது மோட்டார் சைக்கிளில் பின்தொடர்ந்து வந்த இனந்தெரியாத இருவர் துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டு தப்பிச் சென்றனர். இதில், 27 வயது இளைஞர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இதேபோன்று, நேற்று காலை காலி

15

## மக்களின் பிரச்னைகளுக்கு தீர்வு பெற்றுத்தர முயல்வேன்!

### கடமையை பொறுப்பேற்ற ஆளுநர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், மே 23

மக்கள் எதிர்நோக்கும் பிரச்னைகளை யதார்த்தமாக அணுகி - அவற்றுக்குத் தீர்வு பெற்று தர முயல்வேன் என்று வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி. எஸ். எம். சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

வடக்கு ஆளுநராக நேற்று திங்கட்கிழமை யாழ்ப்பாணத்திலுள்ள ஆளுநர் செயலகத்தில் அவர் கடமையைப் பொறுப்பேற்ற பின்னர் செய்தியாளர்களுக்கு கருத்து வெளியிட்டபோதே மேற்கண்டவாறு கூறினார்.

என்னை வாழ்த்துவதற்கு வருகை தந்த மத குருமார்

15



## உயிலங்குளத்தில் விகாரை அமைக்கும் பணியில் படைகள்

மன்னார், மே 23

மன்னார் - உயிலங்குளத்தில் இராணுவத்தின் 542ஆவது படைப் பிரிவு விகாரை ஒன்றை அமைக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றது என்று அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், இது பற்றி அறிந்த தமிழரசு கட்சியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இ. சார்ள்ஸ் நிர்மலநாதன் நேற்று அந்தப் பகுதிக்கு சென்று

15

## சீனாவுடன் ஒப்பந்தம் கைச்சாத்து!

கொழும்பு, மே 23

எரிபொருட்களை இறக்குமதி செய்தல், விநியோகித்தல், விற்பனை செய்தல் ஆகிய நடவடிக்கைகளை நாட்டில் மேற்கொள்வதற்காக அரசாங்கத்துடன் சீன நிறுவனம் நேற்று ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டது.

இலங்கை சினோபெக் எரிபொருள் (தனியார்) நிறுவனம் மற்றும் அதன் தாய் நிறுவனத்துடன் இந்த ஒப்பந்தம் கைச்சாத்தானது என்று ஜனாதிபதியின் ஊடகப்

15

## அரசியல் கடந்து ஆளுநருடன் இணைந்து செயல்படுவோம்!

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவிப்பு

யாழ்ப்பாணம், மே 23

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக வடக்கு மாகாணத்தில் கூடுதலான பாராளுமன்ற உறுப்பினர்களை கொண்டுள்ள தாங்கள் வடக்கு மாகாண ஆளுநருடன் இணைந்து செயல்பட தயாராக உள்ளனர் என்று அந்தக் கட்சியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற

15

## ஜானகவின் பதவி நீக்கத்தை எதிர்க்க பல கட்சிகள் முடிவு

### தமிழ் கட்சிகளின் நிலைப்பாடு இன்று

கொழும்பு, மே 23

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் பதவியிலிருந்து ஜானக ரத்நாயக்கவை நீக்கும் பிரேரணைக்கு எதிராக வாக்களிக்க பல அரசியல் கட்சிகள் தீர்மானித்துள்ளன.

ஐக்கிய மக்கள் சக்தி , ஜனதா விமுக்தி பெரமுன (ஜே. வி. பி.), சுதந்திர மக்கள் சபை, சிறீலங்கா சுதந்திரக்

15

## சிறுவர்களுக்கு பொலிஸாரின் அறிவுறுத்தல்!

மட்டக்களப்பு, மே 23

நாட்டில் அண்மை காலமாக சிறுவர் கடத்தல் அதிகரித்துள்ளது. எனவே, பாடசாலை மாணவர்களை அவதானமாக செயல்பட அறிவுறுத்துமாறு “பாடசாலை மாணவர்களுக்கான அறிவித்தல்” எனும் தலைப்பில் துண்டுப் பிரசுரங்களை மட்டக்களப்பு பொலிஸார் நேற்று விநியோகித்தனர்.

அந்த துண்டு பிரசுரத்தில், அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலை முடிந்தவுடன்

15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது...!

அரச மரங்களை கண்டதும் அந்த இடங்களை தொல்பொருள் திணைக்களத்தினர் தோண்டத் தொடங்கி விடுகின்றனர்.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் ஸ்ரான்லி வீதியில் ஒரு சிறிய கடையுடன்கூடிய காணி ஒன்று விற்பனைக்கு தயாராக இருந்தது. காணியின் உரிமையாளரான வயோதிப பெண்மணி ஒருவர் அதனை விற்பதற்காக யாழ்ப்பாணம் வந்திருந்தார்.

நண்பர் ஒருவர் அந்த இடத்தைப் பார்ப்பதற்காக செல்லும் போது என்னையும் அழைத்திருந்தார்.

யாழ்ப்பாணம் நாகவிகாரைக்கு அருகில் இருந்த அந்த கடையின் பிற்பகுதியில் ஓர் அரச மரம் இருந்தது. அந்த மரத்தைக் கண்டதும் எனது நண்பர் காணி உரிமையாளரிடம் சொன்னார், 'இந்த அரச மரம் இருப்பது விகாரைக்காரருக்கு தெரிந்துவிட்டால் பின்னர் பிரச்னையாகப் போயிடும்', என்றதுடன் அதனை சாட்டாக வைத்தே அந்தக் காணியை தடாலடி விலை குறைப்பில் வாங்கிவிட்டார்.

அதாவது, அரச மரம் என்றால் வடக்கில் அப்படியொரு நிலைமை. தொல்பொருள் திணைக்களத்தினர் அந்த இடத்தைத் தோண்டினாலும் சில வேளைகளில் அங்கே பௌத்த விகாரை இருந்ததற்கான அடையாளம்கூட வரலாம்.

தையிட்டியில் சர்ச்சைக்குரிய விகாரை பற்றி வாசகர்கள் அறிந்திருப்பீர்கள். அது புதிதாக முளைத்த விகாரை அல்ல. தையிட்டியில் ஏற்கனவே இருந்த விகாரை ஒன்றுதான் மீண்டும் அமைக்கப்பட்டது. ஆனால், படையினரின் கட்டுப்பாட்டில் இருந்த இடங்களிலுள்ள காணிகளின் எல்லைகள் எல்லாம் அழிந்துவிட்டதால், ஏற்கனவே இருந்த தையிட்டி விகாரையின் காணி எது என்பதை அடையாளம் கண்டு கொள்ள முடியாததாலோ என்னவோ அருகே இருந்த தனியார் காணியில் விகாரையை கட்டிவிட்டார்கள்.

இப்போது பிரச்னை தனியார் காணியில் அவர்களின் அனுமதியில்லாமல் கட்டியது என்பதுதான்.

ஆக, வடக்கில் பௌத்த விகாரைகள் இருந்தன. ஆனால், அவை சிங்கள - பௌத்தர்களால் கட்டப்பட்டவை அல்ல. அவை தமிழ் - பௌத்தர்களால் கட்டப்பட்டவை என்பதை நிறுவவேண்டிய நாங்கள், பௌத்த மதம் என்பது சிங்களவர்களுக்கு மட்டுமே சொந்தமானது என்று நம்பிக்கொண்டு (அவர்களும் அப்படித்தான் நினைக்கிறார்கள்) பௌத்த மயமாக்கலுக்கு எதிராக போராடிக் கொண்டிருக்கின்றோம்.

இது பற்றி அண்மையில், என்னோடு பேசிய முன்னணி அரசியல் ஆய்வாளர் ஒருவர் நகைச்சுவையாகச் சொன்னார், நமது கோவில்களில் எல்லா கடவுள்களின் சிலைகளையும் வைத்து வழிபடுவதுபோல ஏன் சில கோவில்களில் நாயன்மார் சிலைகளையும்கூட வைத்து வழிபடுவதுபோல புத்தரையும் வைத்து வழிபட்டால் எல்லாம் சரியாகிவிடும்' என்று.

அண்மையில், பலரின் கவனத்தையும் பெற்றிருப்பது இரண்டு முக்கிய பிரமுகர்களின் கருத்துக்கள்தான்.

வடக்கில் பௌத்த விகாரைகள் ஆங்காங்கே அத்துமீறி முளைப்பது பற்றிபலரும் கண்டனம் வெளியிட்டுவரும் வேளையில் அதுபற்றி ஒரு விகாராதிபதியே கருத்துத் தெரிவித்திருப்பது பலரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியிருந்தது.

நயினாதீவு ரஜமஹா விகாரையின் விகாராதிபதி, தையிட்டி விகாரை தமிழர் நிலங்களை களவெடுத்து கட்டிய விகாரை எனவும் புத்தர் இந்து முறைப்படியே வாழ்ந்தவர். ஆனால், தற்போது அனைவரும் சிங்கள - பௌத்தம் எனத் தெரிவிக்கின்றனர். அது தவறானது எனவும் தெரிவித்துள்ளார்.

அவரின் இந்தக் கருத்தை அறிந்ததும், அவரைத் தொடர்பு கொண்ட சிங்கள ஊடகம் ஒன்று அவரிடம் பேட்டி எடுப்பதற்காக முயன்றபோது, அவர் தனக்கு சில நாட்கள் பல்வேறு பணிகள் இருப்பதால் அதற்கான நேரத்தை ஒதுக்க முடியவில்லை என்று கூறியிருக்கிறார். சில நிமிடங்கள் தொலைபேசியிலாவது கருத்துச் சொல்லுமாறு கேட்டபோதும் அவர் அதற்கு சம்மதிக்கவில்லையாம்.

ஆக, தமிழ் மக்கள் மத்தியில் அவர்களுக்கு மட்டுமே இந்தக் கருத்தை சொல்வதற்கு அவர் தயாராக இருந்தமையையே அவதானிக்க முடிந்தது.

அதே போலத்தான் அண்மையில் 'டான்' தொலைக் காட்சிக்கு பேட்டியளித்த பாட்டாலி சம்பிக்க ரணவக்க, வடக்கிலிருந்து ஒருவர்கூட தேசியத் தலைவராக வரலாம், அதிகம் ஏன் அவர்கூட இந்த நாட்டின் ஜனாதிபதியாக வந்தாலும் அவருடன் சேர்ந்து பணியாற்ற தான் தயாராக இருப்பதாகக் கூறியிருந்தார்.

அண்மைக்காலமாக, நாட்டின் அதியுயர் பதவிக்காக குறிவைத்திருக்கும் சம்பிக்க, அதற்காக நேற்று புதிய கட்சி ஒன்றையும் ஆரம்பித்திருக்கிறார். கோட்டாபயவின் 'வியத்மக' பாணியில் 43ஆவது படையணியை தொடங்கிய அவர் இப்போது கட்சியையும் தொடங்கியிருக்கிறார். சிறுபான்மையினரின் வாக்குகள் தேவைப்பட்டால் இப்படியெல்லாம் கதைப்பார்கள் சரி. அதனையே சிங்கள ஊடகங்களிலும் துணிச்சலுடன் சொல்வார்களா என்று பொறுத்திருந்து பார்ப்போம்.!

- ஊர்க்குருவி

# வீதியைத் திறந்த விவகாரம்; வழக்கு ஒத்திவைக்கப்பட்டது

யாழ்ப்பாணம், மே 23

நீதிமன்ற தீர்ப்பை வலிதற்றதாக்கும் வகையில் நடந்து கொண்டவர்களுக்கு எதிரான வழக்கு எதிர்வரும் ஜூன் முதலாம் திகதி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

நீதிமன்ற தீர்ப்பை வலிதற்றதாக்கும் விதத்திலும் அதற்கு முரணாகவும் நடந்து கொண்டதாக தெரிவித்து சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு முன்னாள் பிரதேச சபை உப தவிசாளர் செ. மயூரன், முன்னாள் நகரசபை உறுப்பினர் ஞா.கிஷோர், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் திலகராணி, சாவகச்சேரி பிரதேச செயலர், கமநல சேவைகள் திணைக்கள அதிகாரி ஆகியோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இதன்போது வழக்காளி தரப்பு சட்டத்தரணி குறித்த நபர்கள் நீதிமன்ற தீர்ப்புக்கு முரணாக - நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையாக செயல்பட்டுள்ளார்கள். எனவே, அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்ற முன்னாள் உறுப்பினர்களான செ. மயூரன், ஞா.கிஷோர், திலகராணி ஆகியோர் சார்பில் மன்றில் முன்னிலையான சிரேஷ்ட சட்டத்தரணி வி. திருக்குமரன் தனது தரப்பினர் தனிநபர் பிடித்து வைத்திருந்த மூன்று கிராம மக்கள் பாவிக்கக் கூடிய பிரதேச சபைக்கு சொந்தமான வீதியை மக்கள் பாவனைக்கு மீட்டுத் தருமாறு கோரியே கிராம மக்களோடு போராட்டத்தில் ஈடுபட்டனர். நீதிமன்றை தீர்ப்பை அவமதிக்கும் வகையில் செயல்படவில்லை என்று சுட்டிக் காட்டினார்.

சட்டத்தரணிகளின் வாதத்தை கேட்ட பதில் நீதிவான் எதிர்வரும் ஜூன் முதலாம் திகதி வழக்கு விசாரணைக்கு எடுத்து கொள்ளப்படும் அன்று அனைவரும் தவறாது முற்பட வேண்டும் என்று தெரிவித்து வழக்கை ஜூன் 1ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

தனியாரால் அபகரிக்கப்பட்ட இராமாவில் - தாவளை - இயற்றாலை ஊரெல்லை வீதியை பொதுமக்கள் பாவனைக்கு மீட்டுத் தருமாறு கோரி சாவகச்சேரி பிரதேச சபைக்கு முன்பாக கிராம மக்களோடு இணைந்து மயூரன், கிஷோர், திலகராணி ஆகியோர் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தை அடுத்து சாவகச்சேரி பிரதேச சபை கொடிகாமம் பொலிஸாரோடு இணைந்து பிரதேச சபையில் உள்ள ஆவணங்களின் அடிப்படையில் தனியாரால் அபகரிக்கப்பட்டிருந்த வீதியை அளவீடு செய்து எல்லை வேலிகளை அகற்றி பொதுமக்கள் பாவனைக்காக திறந்து விட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# வவுனியா - ஓமந்தை ரயில் பாதை அமைக்கும் பணி இடைநிறுத்தம்!

### நாளொன்றுக்கு 10 ஆயிரம் டொலர் நட்டமாம்

வவுனியா, மே 23

புகையிரத கடவை அமைக்கக் கோரி பிரதேச மக்கள் முன்னெடுத்துவரும் போராட்டத்தால் வவுனியா ஓமந்தை ரயில் பாதையின் நவீனமயமாக்கல் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. இதனால் ஒப்பந்ததாரருக்கு நாளொன்றுக்கு 10 ஆயிரம் டொலர்களை வீணாகச் செலுத்த வேண்டியுள்ளதாகவும் புகையிரதத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வவுனியாவுக்கும் மதவாச்சிக்கும் இடையில் புகையிரத கடவை அமைக்கக் கோரி கிராம மக்கள் ரயில் தண்டவாளத்தில் அமர்ந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதால் வவுனியா மற்றும் மதவாச்சிக்கு இடையில் ரயில் பாதையை நவீனமயப்படுத்தும் பணிகள் தடைப்பட்டுள்ளன.

மஹவ தொடக்கம் வவுனியா வரையிலான ரயில் பயண வேக வரம்பை அதிகரிப்பதற்காக, பழைய ரயில் பாதைக்குப் பதிலாக நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ரயில் பாதை அமைக்கும் பணி கடந்த ஜனவரி மாதம் 5ஆம் திகதி ஆரம்பமானது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# அமெரிக்கத் தூதுவருக்கு நற்சான்று கொடுத்த விமல்!

### அறகலய பி திட்டமும் நடக்கிறதாம்

கொழும்பு, மே 23

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் சர்ச்சைக்குரிய ருவிற்றர் பதிவுகளை வெளியிடுவதை நிறுத்திவிட்டார் என்று விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தற்போது சர்ச்சைக்குரிய ருவிற்றர் பதிவுகளை வெளியிடுவதில்லை. அவர் நல்லவராக மாறிவிட்டார். யாராவது தும்மினால் கூட ருவிற்றர் பதிவுகளை வெளியிடுவதை அவர் வழக்கமாக கொண்டிருந்தார்.

அத்துடன், அறகலய பிளான் பி தற்போது முன்னெடுக்கப்படுகின்றது என்றும் அவர் கூறியுள்ளார்.

(ஐ)

## பிஸ்கெற் விலைகள் குறைக்கப்பட்டன

கொழும்பு, மே 23

நேற்று திங்கட்கிழமை முதல் பிஸ்கெற் விலையை 8வீதம் மற்றும் 15வீதம் குறைக்க பிஸ்கெற் உற்பத்தி நிறுவனங்கள் முடிவு செய்துள்ளன.

இதன்படி, திருத்தியமைக்கப்பட்ட புதிய விலையின் கீழ் பிஸ்கெற்களை சந்தைக்கு வெளியிடும் நடவடிக்கை ஆரம்பித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)



சிறுப்பிட்டி நாகதம்பிரான் ஆலயத்தில் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் காரைக்கால் அமாமையார் குருபூசை நடைபெற்றது. இதில், விருந்தினராக சைவப்புலவர் சி. கா. கமலநாதன் கலந்து கொண்டு வினா - விடை போட்டியில் பங்கேற்ற மாணவி ஒருவருக்கு பரிசு அளித்தார்.

ஈழநாடு
Eelanadu
23.05.2023 செவ்வாய்க்கிழமை
சோபகிருது வருடம், வைகாசி 09

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# ரணிலுடன் எவ்வாறு பேசுவது?

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்க்கமான தீர்வு ஆலோசனையுடன் வரவேண்டுமென்று சம்பந்தன் தெரிவித்திருக்கின்றார். சம்பந்தன் கூறுவது சரியானது. ஆனால், ரணில் தீர்க்கமான தீர்வு ஆலோசனையுடன் வராவிட்டால் என்ன செய்வதாக உத்தேசம்? தமிழ் கட்சிகள் இனியாவது, என்ன செய்வது என்பதில் தீர்க்கமான முடிவெடுக்க வேண்டும். அவ்வாறில்லாது, ரணில் தீர்க்கமான நிலைப்பாட்டுடன் வரவேண்டுமென்று கூறிவிட்டு, வெறுமனே காலத்தைக் கடத்தும் ரணிலின் நிகழ்ச்சி நிரலுக்கு பின்னால் இழுபட்டு செல்லக் கூடாது.

ரணில் விக்கிரமசிங்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் தமிழரசுக் கட்சிக்கும் புதியவர் அல்லர். அவருடன் இணைந்து புதிய அரசியல் யாப்பு ஒன்றை கொண்டுவரும் முயற்சியில் சம்பந்தன் ஐந்து வருடங்களை கடத்தியிருக்கின்றார். ரணிலால் தற்போதுள்ள அரசியல் சூழலில் தீர்க்கமான தீர்வு ஆலோசனையுடன் வரமுடியுமா - என்றால், நிச்சயமாக முடியாது. அடுத்த ஜனாதிபதி தேர்தல் வரையில் காலத்தைக் கடத்துவதில்தான் ரணில் அக்கறையுடன் இருப்பார் - காரணம், ரணில் அனைவரையும் திருப்திப்படுத்த வேண்டிய நிலையில் இருக்கின்றார்.

இந்த நிலைமையை தமிழ் கட்சிகளால் விளங்கிக் கொள்ள முடியாமல் இல்லை. தமிழ் கட்சிகளின் தலைவர்களுக்கு தென்னிலங்கை தொடர்பில் போதிய அனுபவங்கள் உண்டு. அந்த அனுபவங்களிலிருந்து சிந்தித்தால் அடுத்த ஜனாதிபதி தேர்தல் வரையில் காத்திரமான தீர்மானங்கள் எவற்றையும் ரணில் எடுப்பதற்கான வாய்ப்பில்லை. அதற்கு பின்னரும்கூட அவரின் அரசியல் பலம் எவ்வாறு அமையும் என்பதைப் பொறுத்தே தீர்மானங்களை எடுப்பார் - ஒரு வேளை அவரால் அதிகாரத்தில் தொடர முடியுமாக இருந்தால்.

இந்த நிலையில், தமிழ் கட்சிகளுக்கு முன்னால் இரண்டு தெரிவுகள்தான் உள்ளன. ரணில் தீர்க்கமானதொரு தீர்மானத்தை எடுக்காவிட்டால் ரணிலுடனான பேச்சைக் கைவிட வேண்டும். அவ்வாறு பேசுவதை தவிர்ப்பதால் பெரிய மாற்றங்கள் ஏற்படாவிட்டாலும்கூட, தமிழ் கட்சிகளின் உறுதியான நிலைப்பாட்டை முன்வைக்க முடியும். தொடர்ந்தும் ஏமாறுவதற்கு நாங்கள் தயாரில்லை என்பதை - இலங்கைத் தீவின்மீது மனித உரிமைகள் சார்ந்தும் அரசியல் மறுசீரமைப்பின் அவசியம் தொடர்பிலும் வலியுறுத்திவரும் வெளி சக்திகளை நோக்கி தமிழ் கட்சிகள் கோரிக்கைகளை முன்வைக்கலாம். அரசியல் மறுசீரமைப்பு இல்லாவிட்டால் இலங்கைக்கு உதவுவதில் பொருளில்லை என்பதை ஓர் அரசியல் பிரசாரமாக முன்னெடுக்கலாம்.

ரணிலுடன் பேசுவதை தொடர்வதா அல்லது இல்லையா என்பதை தமிழ் கட்சிகள் தீர்மானிக்க வேண்டும். வெறுமனே அவ்வப்போது அறிக்கைகளை வெளியிட்டுவிட்டு ரணிலின் அழைப்புக்கு செவிசாய்ப்பதில் பயனில்லை. எனவே, சம்பந்தன் கூறுவது போன்று - ரணில் தீர்க்கமான திட்டம் ஒன்றுடன் வருவதற்கு கால அவகாசத்தை அறிவிக்க வேண்டும். ரணிலின் பக்கத்திலிருந்து விடயங்கள் திருப்திகரமாக இடம்பெறவில்லையாயின் பேச்சைக் கைவிட வேண்டும். பேசுகின்றோம் என்று கூறிக்கொண்டு ரணிலின் நிகழ்ச்சிநிரலுக்கு பின்னால் செல்வதால் பயனில்லை. ரணில் தீர்க்கமான தீர்மானத்தை எடுக்காவிட்டால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தமிழரசு கட்சியும் தீர்க்கமான தீர்மானத்தை எடுக்க வேண்டும். அவ்வாறு எடுக்கும் வல்லமை கட்சிகளின் தலைவர்களான இரா. சம்பந்தன், செல்வம் அடைக்கலநாதன், த. சித்தார்த்தன் ஆகியோரிடம் இருக்கின்றதா?

# புலிகளின் பத்திரிகையில் பணியாற்றிய சிங்கள இனத்தவர் சுட்டுக் கொலை!

*கொழும்பு, மே 23*

*விடுதலைப் புலிகளின் பத்திரிகையில் பணியாற்றிய ஐ. டபிள்யூ. சஞ்சீவ (வயது 54) என்பவர் நேற்றுமுன்தினம் அதிகாலை சுட்டுக் கொல்லப்பட்டார் என்று பொலிஸ் புலனாய்வு அதிகாரிகள் தெரித்துள்ளனர்.*

*சுட்டுக்கொல்லப்பட்ட நபர், இராணுவ புலனாய்வு பிரிவின் அதிகாரியான லெப். கேணல் துவான் முத்தலிப் கொலையுடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டில் கைதாகி விடுதலையானவர் என்றும் அறிய வருகின்றது.*

*இவர், கொழும்பு - பொரளை லெஸ்லி ரணகல மாவத்தையில் சனிக்கிழமை அதிகாலை சுட்டுக் கொல்லப்பட்டார். தொழில் தக ராறு காரணமாகவே அவர் கொல்லப்பட்டிருக்கலாம் என பொலிஸார் தெரிவித்தனர்.*

*இது குறித்து மேலும் அறிய வருவதாவது,*

*களனி கல்பொரல்ல பகு தியை சேர்ந்த சஞ்சீவ அவ ரின் பூர்வீக வீட்டின் அருகில் வைத்தே சுட்டுக் கொல்லப்பட்டார். இவர், துப்புரவு சேவை ஒப்பந்தங்களை நிறுவனங்களிடம் பெற்று அவற்றுக்கு ஆட்களை சேர்க்கும் நிறுவனத்தை நடத்தி வருகின்றார்.*

*தினமும் அதிகாலை பொரளையில் உள்ள தனது பூர்வீக வீட்டுக்கு வருவதை வழக்கமாக வைத்திருந்துள்ளார். அவ்வாறு வழமை போன்று, தனது மகளுடன் சனிக்கிழமை அதிகாலை களனியிலிருந்து பொரளைக்கு அன்றைய தினமும் சென்றுள்ளார்.*

*சனிக்கிழமை அதிகாலை வீட்டின் முன்பாக நின்ற வரை மோட்டார் சைக்கிளில் வந்த நபர் ஒருவர் ரி-56 ரக துப்பாக்கியால் சுட்டார். இதில், அவர் காயமடைந்து தரையில் விழுந்துள்ளார். அதன் பின்னரும் துப்பாக்கி வேட்டுகள் தீர்க்கப்பட்டுள்ளன என்று விசாரணைகளில் தெரியவந்தது.*

*அவர் இறந்து கிடந்த இடத்தில் 20இற்கும் மேற் பட்ட ரி-56 ரக துப்பாக்கி தோட்டாகோதுகள் வீதி யில் சிதறிக் கிடந்தன.*

*உயிரிழந்தவர் 2002 அரசு - புலிகள் சமாதான உடன் படிக்கை நடைமுறையிலிருந்த காலத்தில் விடுதலைப் புலிகளுடன் தொடர்புகொண்டிருந்த ஒரு பத்திரிகையில் பணியாற்றியவர் என்று என்று புலனாய்வு வட்டார தகவல்கள் கூறுகின்றன.*

*2005 ஒக்ரோபர் 29 ஆம் திகதி நாரஹேன்பிட்டியில் இராணுவ புலனாய்வு அதிகாரியாக இருந்த லெப். கேணல் துவான் முத்தலிப் கொல்லப்பட்டார். இந்தக் கொலை சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபராக இவரும் கைதுசெய்யப் பட்டு, பின்னர் விடுவிக்கப் பட்டார்.*

*அவரின் தற்போதைய துப்புரவு சேவை வணிகம் தொடர்பான தகராறு காரணமாக துப்பாக்கிச்சூடு நடந்திருக்கலாம் என்று பொலிஸார் தெரிவித்தனர்.*

*(ஐ)*

# மாணிக்கவாசகத்தின் நூல் வெளியீட்டு விழா!

*வவுனியா, மே 23*

*அண்மையில் மறைந்த, மூத்த செய்தியாளர் அமரர் பொன்னையா மாணிக்கவாசகம் எழுதிய 'நினைவுகள் நிகழ்வுகள் நெஞ்சில் மோதும் எண்ண அலைகள்' என்ற நூல் வெளியீட்டு நிகழ்வு சனிக்கிழமை நடைபெறவுள்ளது.*

*வவுனியா கந்தசாமி கோவில் திருமண மண்டபத்தில் பிற்பகல் 3 மணிக்கு, வவுனியா வடக்கு வலய ஆசிரிய மத்திய நிலையத்தின் முகாமையாளர் சு. ஜெயச்சந்திரன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெறும்.*

*இந்த நிகழ்வில், வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரியின் ஓய்வு நிலை உப பீடாதிபதி ந. பார்த்தீபன் வெளியீட்டுரை நிகழ்த்துவார். தொடர்ந்து, 'ஊடக நோக்கு' என்ற தலைப்பில் யாழ். பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம், 'அரசியல் நோக்கு' என்ற தலைப்பில் யாழ். பல்கலைக்கழக அரசறிவியல் துறைத் தலைவர் பேராசியர் கே. ரி. கணேசலிங்கம், 'சமூக நோக்கில்' யாழ். பல்கலைக்கழக ஊடகத்துறை வருகை விரிவுரையாளர், பத்திரிகையாளர் அ. நிக்ஸன் ஆகியோர் ஆய்வுரைகளை நிகழ்த்தவுள்ளனர்.*

*வவுனியா பல்கலைக்கழக உப வேந்தர் பேராசிரியர் த. மங்களேஸ்வரன், கவிஞர் லதா கந்தையா, வீரகேசரி நாளிதழ் உதவி ஆசிரியர் ஆர். ராம் ஆகியோர் சிறப்புரையாற்றுவர்.*

*ஓய்வு நிலைக் கல்விப் பிரதிக் கல்விப் பணிப்பாளரும் அமரர் மாணிக்கவாசகத்தின் மனைவியுமான திருமதி நாகேஸ்வரி மாணிக்கவாசம் ஏற்புரை ஆற்றுவார்.*

*வடக்கின் மூத்த செய்தியாளரான பி. மாணிக்கவாசகம் கடந்த ஏப்ரல் 12ஆம் திகதி காலமானார் என்பது குறிப்பிடத்தக்கது.*

*(ஐ)*

# மாணவியிடம் அங்க சேஷ்டை; தமிழ் சிப்பாய் நையப்புடைப்பு

*யாழ்ப்பாணம், மே 23*

*வசாவிளான் பகுதியில் வீதியால் சென்ற பாடசாலை மாணவியிடம் அங்க சேஷ்டையில் ஈடுபட்ட தமிழ் இராணுவ சிப்பாயை அப்பகுதி மக்கள் நையப்புடைத்து பொலிஸாரிடம் ஒப்படைத்த சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.*


*நேற்று திங்கட்கிழமை மதியம் இந்த சம்பவம் குறித்து மேலும் அறிய வருவதாவது,*

*நேற்றைய தினம் தனிமையில் சென்ற பாடசாலை மாணவியை பின்தொடர்ந்த இராணுவ சிப்பாய் அங்கசேஷ்டையில் ஈடுபட்டுள்ளார்.*

*இதையடுத்து, மாணவி உதவிக் குரலெழுப்பிய நிலையில், அங்கு கூடிய பொதுமக்கள் அந்த இராணுவ சிப்பாயை நையப்புடைத்து பொலிஸில் ஒப்படைத்தனர். இந்த சம்பவம் குறித்து பலாலி பொலிஸாரும் இராணுவ பொலிஸாரும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.*

*தமிழ் இராணுவ சிப்பாயான அவர் கடந்த காலத்திலும் இவ்வாறான சில்மிஷங்களில் சிக்கியிருந்தார் என்று கூறப்படுகின்றது.* *(ஐ-03)*

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



**மே - 23 செவ்வாய்க்கிழமை**
**சோபகிருது வருடம் - வைகாசி 09**
**நல்ல நேரம் : 07.30 - 09.00**
**ராகு காலம் : 03.00 - 04.30**
**திதி : சதுர்த்தி**




**மேடம்**
குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். வாகனப் பழுதை சரி செய்வீர்கள். புது யுக்திகளை கையாளுவீர்கள். நினைப்பதை முடித்துக் காட்டுவீர்கள். வெற்றிக்கு வித்திடும் நாள்.

**இடபம்**
கணவன் - மனைவிக்குள் மன பிணக்குகள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். நல்ல செய்தி வரும். திடீர் லாபம் உண்டு. உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். புதிய பாதை தெரியும் நாள்.

**மிதுனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் பழைய கசப்பான சம்பவங்களைப் பற்றி யாரிடமும் விவாதிக்க வேண்டாம். பொறுமையாக இருங்கள்.தானுண்டு தன் வேலையுண்டு என்று இருப்பது நல்லது.

**கடகம்**
திட்டமிட்ட காரியங்களை அலைந்து திரிந்து முடிக்க வேண்டி இருக்கும். வாகனம் பழுதாகும். வியாபாரத்தில் புது முதலீடு செய்யலாம். பணிகளை போராடி முடிப்பீர்கள். எச்சரிக்கை தேவைப்படும் நாள்.

**சிம்மம்**
அணுகுமுறையை மற்றவர்களின் ரசனைக்கேற்ப மாற்றிக் கொள்வீர்கள். வியாபாரத்தில் புதுத் தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி அடையும். உங்கள் கை ஓங்கும். திட்டங்கள் நிறைவேறும் நாள்.

**கன்னி**
நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். சாதித்துக் காட்டும் நாள்.

**துலாம்**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த சோர்வு நீங்கி துடிப்புடன் செயல்படுவீர்கள். உதவிகள் கிடைக்கும். எதிர்பார்த்த லாபம் வரும். தடைப்பட்ட வேலைகள் முடியும் நாள்.

**விருச்சிகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் பழைய பிரச்னைகள் தலைதூக்கும். வியாபாரத்தில் புது முடிவுகளை தவிர்க்கவும். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் பனிப்போர் வந்து நீங்கும். போராட்டமான நாள்.

**தனுசு**
தன்னம்பிக்கையுடன் எதையும் செய்ய தொடங்குவீர்கள். நல்ல செய்தி உண்டு. வியாபாரத்தில் சில சூட்சமங்களை உணர்வீர்கள். உத்தியோகத்தில் அமைதி நிலவும். திறமைகள் வெளிப்படும் நாள்.

**மகரம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். நண்பர்கள், வியாபாரத்தில் புதிய சரக்குகள் கொள்முதல் செய்வீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரிகள் உங்கள் கோரிக்கையை ஏற்பார்கள். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**கும்பம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். உறவினர்களால் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் புது தொடர்புகள் கிடைக்கும். நுணுக்கங்களை கற்று கொள்வீர்கள். கனவு நனவாகும் நாள்.

**மீனம்**
முக்கிய பிரமுகர்களை சந்திப்பீர்கள். நீங்கள்செய்யும் தொழிலில் லாபம் இரண்டு மடங்கு அதிகரிக்கும். ஊழியர்கள் மற்றும் மேல திகாரிகள் உங்களை ஆதரிப்பார்கள். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள்.

# கருணாநிதி நூற்றாண்டு விழா அரசு விழாவாக கொண்டாடப்படும்!

## விரைவில் அரசாணை என்று முதல்வர் அறிவிப்பு

சென்னை, மே 23

“கருணாநிதி நூற்றாண்டு விழாவை அனைத்துத் தரப்பினரும் பங்கெடுக்கும் விழாவாக நடத்த வேண்டும். இன்றைய நவீன ஊடகங்கள் அனைத்தையும் இதற்கு பயன்படுத்த வேண்டும். செய்தி மக்கள் தொடர்பு துறை இதில் முக்கிய பங்காற்ற வேண்டும்” என்று தமிழ்நாடு முதல்வர் மு. க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

மறைந்த முதல்வர் கருணாநிதியின் நூற்றாண்டு விழாவை தமிழக அரசின் சார்பில் சிறப்பாக கொண்டாடுவது குறித்து ஆலோசனைக் கூட்டம் நேற்று முதல்வர் ஸ்டாலின் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் முதல்வர் ஸ்டாலின் பேசுகையில்,

“கருணாநிதியின் நூற்றாண்டு விழாவை சிறப்போடும் எழுச்சியுடனும் கொண்டாடுவது குறித்த பல்வேறு ஆலோசனைகளை வழங்கிய அனைவருக்கும் எனது நன்றி.

ஐந்து முறை தமிழ்நாட்டின் முதல்வராக அமர்ந்தவர் கருணாநிதி. 13 முறை சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டு, 13 முறையும் வெற்றி பெற்ற தலைவர் அவர். தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும் அமர்ந்து அரிய வாதங்களை எடுத்து வைத்தவர். இந்திய நாட்டின் குடியரசுத் தலைவர்களை, துணைக் குடியரசுத் தலைவர்களை பல முறை தேர்ந்தெடுத்து அவர்களை அந்தப் பொறுப்புகளில் அமர்த்தியவர்.

இந்தியாவின் பிரதமர்களை பல்வேறு முறை உருவாக்கியவர். தமிழ்நாட்டின் அரசியல் தலைவராக மட்டுமல்ல, இந்திய அரசியலின் திசையைத் தீர்மானிப்பவராகவும் இருந்தார். தமிழுக்கு செம்மொழி அந்தஸ்து கிடைக்கவும் காரணமாக இருந்தார்.

அவரின் நூறாவது பிறந்த நாளை பெரிய விழாக்களாக நடத்தாமல், அனைத்து தரப்பினரும் பங்கெடுக்கும் விழாக்களாக நடத்தவேண்டும். ஆலோசனைகள் அனைத்தையும் வரிசைப்படுத்தி - தொகுத்து அரசு விழாவாக நடத்துவோம். இதற்கான அரசாணை விரைவில் வெளியிடப்படும் - என்றார்.

(ஐ)

# ‘திராவிட மொடல்’ ஆட்சியில் ஊழல் கொடிகட்டி பறக்கிறது

## எடப்பாடி பழனிசாமி குற்றச்சாட்டு

சென்னை, மே 23

தி. மு. க. ஆட்சியில் சட்டம் - ஒழுங்கு உள்ளிட்ட பிரச்னைகள் குறித்து ஆளுநர் ஆர். என். ரவியிடம் முறைப்பாடு அளித்த எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி, “திராவிட மொடல் ஆட்சியில் ஊழல் கொடிகட்டி பறக்கிறது” என்று குற்றம்சாட்டினார்.

சென்னையில் அ. தி. மு. க. சார்பில் பேரணியாக சென்று முறைப்பாட்டு மனு அளித்த அவர் பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில்,

“இரண்டு ஆண்டு கால ஆட்சியில் நடைபெற்றுள்ள ஊழல், சட்டம் - ஒழுங்கு சீர்கேடு உள்ளிட்ட பல்வேறு முறைப்பாடுகள் குறித்து ஆளுநரிடம் முறைப்பாட்டு மனு அளித்துள்ளோம். நாங்கள் அளித்த முறைப்பாட்டை பரிசீலனை செய்வதாக ஆளுநர் கூறியுள்ளார்.

திராவிட மொடல் ஆட்சியில் பல்வேறு ஊழல்கள் கொடிகட்டி பறக்கின்றன. இது தொடர்பாக ஆளுநரிடம் ஆதாரத்துடன் கூறியுள்ளோம். தமிழ்நாட்டில் அன்றாடம் நிகழும் நிகழ்வுகள், இவற்றால் மக்கள் படும் அவதிகள் குறித்து முழுமையாக ஆளுநரிடம் தெரிவித்திருக்கிறோம்.

தி. மு. க. அரசின் ஊழல் மற்றும் முறைகேடுகள் என்ற தலைப்பில் துறை ரீதியான ஊழல் குற்றச்சாட்டு, சட்டம் - ஒழுங்கு சீர்கேடு மற்றும் பல்வேறு பிரச்னைகள் குறித்து அந்த மனுவில் தெளிவாக கூறியுள்ளோம் - என்றார்.

(ஐ)

## மூத்த நடிகர் சரத் பாபு காலமானார்!

ஹைதராபாத், மே 23

தமிழ் திரைப்பட நடிகர் சரத் பாபு (வயது 71) பெங்களூரிலுள்ள மருத்துவமனையில் நேற்று காலமானார்.

அவர், தமிழ், தெலுங்கு, மலையாள மொழிகளில் சுமார் 200 படங்களுக்கு மேல் நடித்துள்ளர்.

தமிழில் ‘நிழல் நிஜமாகிறது’, ‘உதிரிப்பூக்கள்’, ‘நெஞ்சத்தைக் கிள்ளாதே’, ‘முள்ளும் மலரும்’, ‘அண்ணாமலை’, ‘முத்து’ உள்ளிட்ட ஏராளமான படங்களில் நடித்துள்ளார்.

கடந்த சில வாரங்களுக்கு முன்பு சரத்பாபுவுக்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டதால் பெங்களூரில் உள்ள தனியார் மருத்துவமனை ஒன்றில் சிகிச்சைப் பெற்று வந்தார். தொடர் சிகிச்சையில் இருந்து வந்த நிலையில், அவர் நேற்று காலமானார். அவருக்கு திரையுலகினரும், ரசிகர்களும் புகழஞ்சலி செலுத்தி வருகின்றனர். (ஐ)

## தி. மு. க. ஆட்சிக்கு எதிராக அ. தி. மு. க. ஆளுநரிடம் மனு

சென்னை, மே 23

சென்னையில் பேரணியாக சென்று ஆளுநர் ஆர். என். ரவியிடம் தி. மு. க. ஆட்சி குறித்து அ. தி. மு. க. பொதுச் செயலாளரும் எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி பழனிசாமி முறைப்பாட்டு மனு அளித்துள்ளார்.

முன்னதாக, எடப்பாடி பழனிசாமி தலைமையில் கிண்டியில் பேரணி நடைபெற்றது. அங்கிருந்து ஆளுநர் பணிமனை நோக்கி பேரணி நகர்ந்தது. இதில் ஏராளமானவர்கள் பங்கேற்றனர்.

இந்தப் பேரணியால் சென்னை - கிண்டியில் நேற்று பெரும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

(ஐ)

# 2024 பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட விரும்பவில்லை

## தமிழ்நாடு பா. ஜ. க. தலைவர்

கோவை, மே 23

2024ஆம் ஆண்டு மக்களவை தேர்தலில் போட்டியிட விரும்பவில்லை. கட்சி தொண்டனாக தேர்தல் வெற்றிக்கு பாடுபடுவேன் என்று பா. ஜ. க. மாநில தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

பொலிஸாருக்கு உரியநேரத்தில் பதவி உயர்வு கிடைப்பதில்லை. இதுகுறித்து பொலிஸ் துறை தலைவர் முதல்வரின் கவனத்துக்குக் கொண்டு சென்று போர் கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழ்நாடு முழுவதும் கள் விற்பனை செய்ய வேண்டும். இதன்மூலம் அடுத்த 5 ஆண்டுகளில் வருமானத்தை எவ்வாறு ஈட்ட முடியும் என விழுப்புரத்தில் நடைபெறும் மாநாட்டில் மக்கள் மத்தியில் வெள்ளை அறிக்கை வெளியிடப்படும்.

1985இற்கு பின் கர்நாடகத்தில் ஆளுங்கட்சி திரும்ப ஆட்சிக்கு வந்ததில்லை. ரூ. 2 ஆயிரம் நோட்டு புழக்கத்தில் இல்லை. அவற்றை அதிகம் வைத்துள்ளவர்கள் பதுக்கிவைத்தவர்கள். எனவே, அவர்களுக்கு மட்டும்தான் பிரச்னை.

2024ஆம் ஆண்டு மக்களவை தேர்தலில் போட்டியிட விரும்பவில்லை. தமிழகத்தில் ஆட்சி மாற்றத்துக்குதான் பா. ஜ. கவில் இணைந்தேன். கட்சி தொண்டனாக தேர்தல் வெற்றிக்கு பாடுபடுவேன். டில்லிக்கு செல்ல எனக்கு விருப்பமில்லை. தமிழ்நாட்டு மண்ணில் எனது அரசியல் இருக்க வேண்டும் என விரும்புகிறேன் - என்றார்.

(ஐ)

# யாழ்.பல்கலைப் பொருட்கள் கையாடல் இரண்டு மில்லியன் ரூபாய்க்கும் அதிகம்

## விசாரணைகளில் மேலும் தகவல்கள் வெளிவரும்

யாழ்ப்பாணம், மே 23

**யாழ். பல்கலைக்கழக பராமரிப்புப் பகுதியின் களஞ்சியசாலையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் பொருள்கள் கையாடல் குறித்த விசாரணைகளில் பல திடீர் திருப்பங்கள் ஏற்பட்டுள்ளன.**

கையாடப்பட்ட பொருட்களின் பெறுமதி சுமார் மூன்றரை இலட்சம் என சம்பந்தப்பட்ட பகுதியின் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் அறிக்கையிட்டிருந்தாலும், அது இரண்டு மில்லியன் ரூபாய்களைக் கடந்திருக்கலாம் எனப் பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினர்கள் சிலர் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

இதனால் முறையான விசாரணைகளை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும் எனவும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இந்தக் கையாடல் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கெனப் பேரவையினால் அமைக்கப்பட்ட விசாரணைக் குழுவின் உறுப்பினர்கள் இருவர் விசாரணைகளில் பங்குபற்றாமல் வெளியேறியிருப்பதையடுத்து, கையாடல் குறித்த விசாரணைகளை மேற்கொள்வதற்குப் புதிதாக இரண்டு உறுப்பினர்களைப் பல்கலைக் கழகப் பேரவை நியமித்துள்ளது.

கையாடல் இடம்பெற்றதாகக் கூறப்படும் பகுதியுடன் நேரடித் தொடர்பு இல்லாத உறுப்பினர்களைக் கொண்டு பூர்வாங்க விசாரணைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற பேரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக பராமரிப்புப் பகுதியின் களஞ்சியத்தில் ரூபா 3 லட்சத்து 75 ஆயிரம் பெறுமதியான பொருட்கள் காணாமல் போயுள்ளதாக பராமரிப்புப் பகுதியின் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளால் பல்கலைக்கழக நிர்வாகத்துக்கு அறிவிக்கப்பட்டதுடன், அந்த அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட பூர்வாங்க விசாரணைகளின் அடிப்படையில் களஞ்சியசாலைப் பணியாளர்கள் சிலர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுமிருந்தது.

எனினும் சம்பவம் தொடர்பில் அதிகாரிகளின் தவறை மறைப்பதற்காக அப்பாவித் தொழிலாளர்கள் மீது குற்றஞ்சாட்டப்படுவதாகவும், சம்பவத்துடன் நேரடித் தொடர்பில்லாதவர்களே பூர்வாங்க விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும் எனவும் தொழிற்சங்கங்கள் சுட்டிக்காட்டி வந்தன.

இது தொடர்பாக பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினர்களுக்கும் தொழிற்சங்கங்கள் தெரியப்படுத்தியிருந்தன.

இதனிடையே, கடந்த மார்ச் மாதம் 25 ஆம் திகதி கூடிய பேரவை, பூர்வாங்க விசாரணை அறிக்கையின் அடிப்படையில் களஞ்சியசாலைப் பொறுப்பாளர் ஒருவரை விசாரணைகள் முடிவுறும் வரையில் தற்காலிகமாக இடைநிறுத்தியதுடன், சம்பவம் தொடர்பில் அவருக்குக் குற்றப் பத்திரிகையையும் அனுப்பியிருந்தது. முறையான விசாரணைகளை மேற்கொள்வதற்கென மூவர் கொண்ட குழுவையும் நியமித்திருந்தது.

குற்றஞ்சாட்டப்பட்ட களஞ்சியசாலைப் பணியாளர் தன் மீதான குற்றச்சாட்டுகளை மறுத்திருக்கிறார். சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகளிலும் இவர் தனது பக்கக் கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார். கோப்பாய் பொலிஸார் தனியாக விசாரணைகளைத் தொடர்கின்றனர்.

விசாரணைக் குழுவுக்குப் பேரவையினால் நியமிக்கப்பட்டவர்களுக்கான நியமனக் கடிதங்கள் மே மாதம் 08 திகதியிடப்பட்டு 10 ஆம் திகதி உரியவர்களுக்குச் சமர்ப்பிக்கப்பட்டன. காலந்தாழ்த்திக் கடிதம் அனுப்பப்பட்ட காரணத்தால், தன்னால் விசாரணைகளை மேற்கொள்ள முடியாத நிலையில் இருப்பதாகவும், மே 12 ஆம் திகதி தான் ஐக்கிய இராச்சியத்துக்குப் பயணப்பட இருப்பதனால் விசாரணைக் குழுவில் இருந்து தன்னை விடுவிக்குமாறும் அந்த அதிகாரி பல்கலைக்கழக நிர்வாகத்துக்கு அறிவித்திருந்தார்.

அதே நேரம் விசாரணைக்குழுவுக்குத் தலைவராக நியமிக்கப்பட்டவர் வேறு காரணங்களினால் விசாரணைக் குழுவில் இருந்து விலகுவதாக அறிவித்து விலகிக்கொண்டார்.

இதனையடுத்து கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற பேரவைக் கூட்டத்தில் சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் தலைமையில், இலங்கை மின்சார சபையின் பொறியியலாளர் ஒருவரையும், வடக்கு மாகாண விவசாய அமைச்சின் பிரதம கணக்காளரையும் உறுப்பினர்களாகக் கொண்ட விசாரணைக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

அத்துடன், சம்பவத்துடன் நேரடியாகச் சம்பந்தப்படாத இருவர் பூர்வாங்க விசாரணைகளை மேற்கொள்வதற்காகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். இதன் மூலம் பராமரிப்புப் பகுதியின் அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட பூர்வாங்க விசாரணை வலிதானதாகக் கருதப்படுகிறது.

மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ள பூர்வாங்க விசாரணைகளின் போதும், அதன் அடிப்படையில் தொடரப்படவுள்ள முறையான விசாரணைகளின் முடிவில் இன்னும் பல திடுக்கிடும் உண்மைகள் வெளிவரலாம் என்பதோடு இக் கையாடலுடன் தொடர்புடைய முக்கிய சூத்திரதாரிகள் சிக்கலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

(அ)

# நடமாடும் விபசார நிலையம் முற்றுகை: 7 பேர் பொலிஸாரினால் அதிரடிக் கைது!

கொழும்பு, மே 23

இளம் பெண்களைக் கூடுதலான விலைக்கு விற்பனைச் செய்யும் நடமாடும் விபசார நிலையத்தை நடத்திச் சென்ற குற்றச்சாட்டில் அரகலய ஏற்பாட்டாளர் உள்ளிட்ட ஏழு பேர் அங்குருவாத்தொட ரெமுன பிரதேசத்தில் வைத்து, பாணந்துறை வலான குற்றத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட ஏனைய சந்தேக நபர்களில், விபசாரத்தில் ஈடுபடும் பெண்கள் நால்வர், அவர்களை வாடகை வாகனத்தில் அமர்த்திச் சென்ற சந்தேக நபர்கள் இருவரும் அடங்குகின்றனர்.

பிரதான சந்தேக நபர் அரகலயவின் முக்கிய அமைப்பாளராக செயற்பட்ட மொரட்டுவையை வசிப்பிடமாகக் கொண்ட 33 வயதானவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

சமூக வலைத்தளங்களில் பிரசாரங்களை முன்னெடுக்கும் மேற்படி நபர், நடமாடும் விபசார நிலையத்தை நடத்திச் சென்றுள்ளார்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில், ஒரு மூலோபாயத்தைக் கையாண்டு 50 ஆயிரம் ரூபாய்க்கு பெண்ணொருவரை பொலிஸார் விலை பேசியுள்ளனர்.

அதனடிப்படையில் சந்தேக நபர், கடந்த சனிக்கிழமை இரவு நான்கு பெண்களை வாகனத்தில் ஏற்றிக்கொண்டு வந்தபோது பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பிரதான சந்தேகநபர், பல வருடங்களாக விபசார வியாபாரத்தை நடத்திச் சென்றுள்ளார்.

அதனூடாக பெருந்தொகையான பணத்தை அவர் சம்பாதித்துள்ளார் என்பது விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

(அ)

# பல்கலைக்கழகங்களுக்கு அருகில் பாதுகாப்பை பலப்படுத்த ஏற்பாடு

கொழும்பு, மே 23

கொழும்பு, ஜயவர்த்தனபுர மற்றும் களனி பல்கலைக்கழகங்களுக்கு அருகில் பாதுகாப்பை பலப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு தரப்பு தெரிவித்துள்ளது. பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்களின் கோரிக்கையை அடுத்து இதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அண்மையில் பொதுப்பாதுகாப்புத்துறை அமைச்சர் டிரான் அலஸூடன் இடம்பெற்ற சந்திப்புக்களின் போது துணைவேந்தர்கள் இதற்கான கோரிக்கைகளை முன்வைத்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சந்திப்புக்களின் போது, பல்கலைக்கழக மாணவர்களின் தற்போதைய பாதுகாப்பு நிலைமைகள், மற்றும் திருட்டு சம்பவங்களின் அதிகரிப்பு போன்ற விடயங்கள் கருத்திற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

# 24ஆம் திகதி பாராளுமன்றத்துக்கு சகலரும் கண்டிப்பாக வரவேண்டும்

## ஆளுங்கட்சி எம்.பிகளுக்கு அறிவிப்பு

கொழும்பு, மே 23

ஆளுங்கட்சி உறுப்பினர்கள் அனைவரும், 24ஆம் திகதி நடைபெற உள்ள பாராளுமன்ற அமர்வில் கண்டிப்பாகக் கலந்துகொள்ள வேண்டும் என அமைச்சரும் ஆளுங்கட்சியின் பிரதமக் கொறடாவுமான பிரசன்ன ரணதுங்க, ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கு எழுத்துமூலம் அறிவித்துள்ளார்.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்கவை பதவியிலிருந்து விலக்கும் யோசனை மீதான வாக்கெடுப்பு 24ஆம் திகதி நடைபெற உள்ளது.

இந்த வாக்கெடுப்பின்போது ஆளுங்கட்சி எம்.பிக்கள் அதிகளவில் கலந்துகொள்ளவேண்டும் என்பதற்காகவே இவ்வாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஆளுங்கட்சியினர் 24ஆம் திகதி வெளிநாடுகளுக்கு செல்லக் கூடாது எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (அ)

# போலிக்கடவுச்சீட்டில் இலங்கை வந்தவர்களை தனது அதிகாரத்தால் விடுவித்தாரா அருந்திக?

கொழும்பு, மே 23

போலி கடவுச்சீட்டைப் பயன்படுத்தி இலங்கைக்குள் பிரவேசிக்க முயன்ற சீனப் பிரஜை ஒருவரும், அவரது எகிப்திய நண்பர்களும் இராஜாங்க அமைச்சர் ஒருவரின் எழுத்துமூல கோரிக்கையின் பேரில் குடிவரவு அலுவலக அதிகாரிகள் வழங்கிய அறிவுறுத்தலின் அடிப்படையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வியாழன் இரவு 09.50 மணியளவில் டுபாயில் இருந்து எமிரேட்ஸ் எயார்லைன்ஸ் விமானம் மூலம் இந்த சீன, எகிப்திய பிரஜைகள் கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வந்துள்ளனர்.

இந்த குழுவின் தலைவரான சீன நாட்டவர், ஆபிரிக்காவின் “கினி “ நாட்டிலிருந்து போலியாக தயாரிக்கப்பட்ட கடவுச்சீட்டை வழங்கினார். டுபாயில் இருந்து கட்டுநாயக்காவுக்கு பயணிப்பதற்கும் இதே கடவுச்சீட்டை அவர் பயன்படுத்தியுள்ளார். ஆனால் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கடவுச்சீட்டுப் பக்கம் போலியானது என தெரியவந்ததையடுத்து விமான நிலையத்தில் இவர்கள் மோசமாக நடந்து கொள்ள ஆரம்பித்துள்ளனர்.

அங்கு குடிவரவு அதிகாரிகள், விமான நிலைய பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் எமிரேட்ஸ் எயார்லைன்ஸ் அதிகாரிகள் இணைந்து அவர்களைக் கட்டுப்படுத்தி, நாடு கடத்துவதற்காக விமான காத்திருப்பு அறைக்கு திருப்பி அனுப்பினர்.

அதன்போது கட்டுநாயக்க விமான நிலைய குடிவரவு குடியகல்வு அதிகாரிகளுக்குச் செல்வாக்குமிக்க நபர்களிடம் இருந்து பல தொலைபேசி அழைப்புகள் வந்துள்ளதுடன், இந்த பயணிகளும் இலஞ்சம் வழங்க முயற்சித்ததாக குடிவரவு குடியகல்வு அதிகாரிகள் தெரிவித்தனர்.

பின்னர், அவர்கள் முதலீட்டாளர்கள் குழுவாக இருப்பதால், அவர்களை விடுவிக்குமாறு, சம்பந்தப்பட்ட இராஜாங்க அமைச்சர், குடிவரவு குடியகல்வுக் கட்டுப்பாட்டாளருக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

அதன்படி, குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் பணிப்புரையின்பேரில் கட்டுநாயக்க விமான நிலைய குடிவரவு அதிகாரிகள் இந்த சீன மற்றும் எகிப்திய பிரஜைகளை விடுவித்துள்ளார்.

போலிக் கடவுச்சீட்டுகளை பயன்படுத்தி முதலீட்டாளர்கள் இலங்கைக்கு வருவது குறித்து, குடிவரவு அதிகாரிகள் திகைப்படைந்துள்ளனர்.

இந்த விடயத்தில் இராஜாங்க அமைச்சர் அருந்திக்க பெர்னாண்டோ தலையிட்டிருப்பது தொடர்பில் ஜனாதிபதியின் கவனத்துக்கும் கொண்டுவரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

(அ)

# சிரானி போன்று ஜனக ரத்நாயக்கவையும் பதவி நீக்குவதற்கு அரச தரப்பு முயல்கிறது

## இதற்கு பெரமுன ஆதரவளிக்குமா என கேட்கிறார் தயாசிறி

கொழும்பு, மே 23

**முன்னாள் பிரதம நீதியரசர் சிரானி பண்டாரநாயக்கவை பாராளுமன்றத்தின் ஊடாகப் பதவியிலிருந்து நீக்கியதுபோல, ஜனக ரத்நாயக்கவையும் பாராளுமன்றம் ஊடாகப் பதவியிலிருந்து விலக்கப் பார்ப்பதாக சுதந்திரக் கட்சி குற்றஞ்சுமத்தியுள்ளது.**

நாட்டு மக்களின் வயிற்றிலடிக்கும் யோசனைகளை முன்னெடுக்கவேண்டாமெனக் கூறிய பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்கவை பதவி நீக்கும் யோசனைக்கு, மொட்டுக் கட்சியினர் ஆதரவாக வாக்களிப்பார்களா எனவும் சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர கேள்வி எழுப்பியுள்ளார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்- நாட்டு மக்களை நேசிப்பவர் யார் என்பதை 24ஆம் திகதி வாக்கெடுப்பின்போது தெரிந்துகொள்ள முடியும்.

நுரைச்சோலை அனல்மின் நிலையம் அமைத்ததன் பின்னர் மின் கட்டணத்தை 25 சதவீதமாகக் குறைப்பதாக அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறியிருந்தார். ஆனால், 25 சதவீதமாகக் குறைக்கப்பட்ட மின் கட்டணம் தற்போது 75 சதவீதமாக அதிகரிக்கப்பட்டு மீண்டும் 66 சதவீதம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இவை அனைத்தும் பொதுப் பயனப்பாடுகள் ஆணைக்குழுவுக்கு அப்பாற்பட்டு நடந்தவைகள்.

கல்வி பொதுத்தராதர சாதாரணத் தரப் பரீட்சைகள் நடைபெற்ற காலப் பகுதியில் மின் வெட்டை அமுல்படுத்தவேண்டாம் என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு கூறியபோதும் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை.

இவ்வாறான நிலையில் மின் கட்டணத்தை 3 சதவீதத்தால் குறைப்பதற்கு அமைச்சர் நடவடிக்கை எடுத்துள்ளார். ஆனால், 27 சதவீதமாக மின் கட்டணத்தைத் தற்போது குறைக்க முடியும் என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு கூறுகிறது. நாட்டின் ஏழைகளைக் காப்பாற்ற நடவடிக்கை எடுத்த அந்த ஆணைக்குழுவின் தலைவரை பதவி விலக்கப் பார்க்கிறார்கள்.

முன்னாள் பிரதம நீதியரசர் சிரானி பண்டாரநாயக்கவை பாராளுமன்றத்துக்கு அழைத்து அவரைப் பதவி விலக்கியதுபோலவே தற்போது, ஆணைக்குழுவின் தலைவரை ஜனக ரத்நாயக்கவை பதவி விலக்கப் பார்க்கிறார்கள்-என்றார். (அ)

# அம்பாந்தோட்டையில் சூடு; இளம் குடும்பஸ்தர் மரணம்

கொழும்பு, மே 23

அம்பாந்தோட்டை - சுச்சி கிராமத்தில் நேற்று முன் தினம் இரவு 9.00 மணியளவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ஹக்மான கொடித்துவக்குகே சாகர என்ற 35 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தையே சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

குறித்த நபர் தனது மனைவி மற்றும் குழந்தையுடன் மோட்டார் சைக்கிளில் பயணித்த போது, மற்றுமொரு மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்த நபர் அம்பாந்தோட்டை பொது வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் போது உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நபர் கொலை வழக்கில் சிறையில் அடைக்கப்பட்டு கடந்த சில நாட்களுக்கு முன்பு பிணையில் வந்துள்ளதாக மேலும் தகவல் வெளியாகியுள்ளது. (அ)

# ஆணின் சடலம் மீட்பு

கொழும்பு, மே 23

அடையாளம் தெரியாத ஆண் ஒருவரின் சடலம் சிலாபம் களப்பில் மிதந்த நிலையில் நேற்று முற்பகல் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

களப்பில் ஆண் ஒருவரின் சடலம் மிதப்பதாக மீனவர் ஒருவர் பொலிஸாருக்கு வழங்கிய தகவலை அடுத்து சடலம் மீட்கப்பட்டது.

சடலமாக மீட்கப்பட்டவர் 40 முதல் 45 வயதுக்கு உட்பட்டவராக இருக்கலாம் என சந்தேகிப்பதாக பொலிஸார் கூறினர்.

மீட்கப்பட்டுள்ள அடையாளம் தெரியாத நபரின் சடலம் தொடர்பில் சிலாபம் நீதவானுக்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சிலாபம் பொலிஸார் சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# ‘வெற்றிலை’ செயலர்களுக்கு தடை!

கொழும்பு, மே 23

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் தொடர்பில் எழுந்துள்ள சர்ச்சை தொடர்பில் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இந்த விவகாரம் தொடர்பான விசாரணைகள் நிறைவடையும் வரை அமைச்சர் மகிந்த அமரவீரவை அல்லது திலங்க சுமதிபாலவை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளராக அங்கீகரிக்க முடியாது என தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளராக தம்மை அங்கீகரிக்குமாறு திலங்க சுமதிபால அண்மையில் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அறிவித்திருந்தார்.

அதனையடுத்து, தாமே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளராக தொடர்வதாக அமைச்சர் அமரவீர தேர்தல்கள் ஆணைக் குழுவிடம் தெரிவித்திருந்தார்.

இவ்விரு கோரிக்கைகளையும் பரிசீலித்த தேர்தல்கள் ஆணைக்குழு விசாரணைகள் முடியும் வரை இருவரையும் கட்சியின் பொதுச் செயலாளராக ஏற்றுக்கொள்ள மாட்டோம் என அறிவித்துள்ளது. (அ)

# வாகனத்தால் மோதி காதலியை கொல்ல முயற்சித்த காதலன்

கொழும்பு, மே 23

அத்துருகிரிய மைலங்கம மைதானத்துக்கு அருகில் மோட்டார் சைக்கிளில் சென்ற பெண் மற்றும் மேலும் ஒருவரை காரினால் மோதி கொலை செய்ய முயற்சித்த சம்பவம் தொடர்பாக அத்துருகிரிய பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

சம்பவத்தில் காயமடைந்த மோட்டார் சைக்கிளில் சென்ற பெண் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பெண்ணிடம் பெறப்பட்ட வாக்குமூலத்தை அடுத்து சம்பவம் தொடர்பான விவரங்கள் தெரியவந்துள்ளன.

காயமடைந்த பெண் பாலியல் தொழிலில் ஈடுபடுவதாகக் கூறி அவரது தொலைபேசி இலக்கத்துடன் வேறு ஒரு பெண்ணின் புகைப்படத்தை இணைத்து இணையத்தளத்தில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து புகைப்படம் வெளியிடப்பட்ட பெண்ணின் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்ட அவரது காதலன் பாலியல் தொழிலுக்கு வருமாறு கோரியுள்ளார்.

இதன் பின்னர் அந்தப் பெண் வேறு ஒரு நபருடன் மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த போது, வாகனத்தில் மூன்று பேர் வந்துள்ளனர்.

அந்த மூன்று பேரில் தொலைபேசி அழைப்பை எடுத்த பெண்ணின் காதலனும் இருந்துள்ளார்.

அப்போது மோட்டார் சைக்கிளில் வந்த பெண் தன்னுடன் வந்த நபருடன் அங்கிருந்து தப்பிச் செல்ல முயற்சித்துள்ளார்.

இதனால், ஆத்திரமடைந்த காதலன் மற்றும் அவருடன் சென்றிருந்த நபர்கள் மோட்டார் சைக்கிள் மீது வாகனத்தை மோதி அவர்களை கொலை செய்ய முயற்சித்துள்ளனர்.

இதில் காயமடைந்த பெண் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதனையடுத்து பெண்ணிடம் விசாரணைகளை ஆரம்பித்த பொலிஸார், கொலை செய்ய முயற்சித்த நபர்களை கைது செய்துள்ளதுடன் அவர்கள் பயன்படுத்திய காரையும் கைப்பற்றியுள்ளனர். (அ)

# வெளிநாட்டுக்குச் சென்ற யுவதிகள் நாடு திரும்ப உடலை விற்கும் நிலை

## சுட்டிக்காட்டுகிறார் சுனில் ஹந்துன்நெத்தி

கொழும்பு, மே 23

வெளிநாடுகளுக்கு தொழிலுக்காகச் சென்ற நிலையில், கைவிடப்பட்ட யுவதிகள் இலங்கை திரும்ப தமது உடலை விற்க வேண்டிய நிலையில், அரசாங்கத்துக்கு திருடவும் வீண் விரயம் செய்யவும் தேவையான பணம் இருப்பதாக மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல் சபை உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- வெளிநாடுகளில் இருக்கும் இலங்கைத் தூதரகங்கள் பிரச்னைகளை தீர்ப்பதற்கு பதிலாக பெண்களை மாதக் கணக்கில் பாதுகாப்பு இல்லத்தில் தங்க வைக்கின்றன.

வேலைவாய்ப்பு முகவர்கள் எஜமான்களிடம் பெருந்தொகை பணத்தைப் பெற்றுக்கொள்கின்றனர்.

பெற்றுக்கொள்ளும் பணத்தை வீட்டுப் பணிப்பெண்களாக பணிப்புரியும் பெண்களுக்கு வழங்குவதில்லை.


மிகக்குறைந்த தொகையே பெண்களுக்கு வழங்கப்படுகின்றன.

வழங்கிய பணத்தைவிட அதிகளவில் பெண்களிடம் வேலை பெறப்படுகின்றது. வேலை சுமையைத் தாங்க முடியாத காரணத்தினாலேயே பெண்கள், வேலை செய்யும் வீடுகளில் இருந்து தப்பியோடுகின்றனர்.

பெண்கள் தப்பி வந்ததும் முகவர்களுக்குச் செலுத்திய பணத்தை மீண்டும் வழங்கினால் மாத்திரமே கடவுச்சீட்டு மற்றும் ஏனைய ஆவணங்களை வழங்க முடியும் என எஜமான்கள் கூறுகின்றனர்.

தூதரகங்கள் முகவர்களை அழைத்து பேச்சுவார்த்தை நடத்தி பிரச்னையை தீர்ப்பதற்கு பதிலாக பெண்களை பாதுகாப்பு இல்லத்தில் மாதக் கணக்கில் தங்க வைக்கின்றனர்.

ஒரு புறம் அது நாட்டுக்கு சுமை. உணவு உட்பட தேவையானவற்றை வழங்கவேண்டும்.



செய்வதறியாத யுவதிகள் உடலை விற்கும் தொழிலுக்கு சென்றாவது இலங்கை திரும்ப பணத்தைத் தேடும் நிலைமை காணப்படுகிறது.

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்திடம் பல நிதியங்கள் இருக்கின்றன. அவற்றில் உள்ள பணத்தை பயன்படுத்தி யுவதிகளை நாட்டுக்கு அழைத்து வர முடியும்.

இலங்கைக்கு அதிகளவில் பணத்தைக் கொண்டு வரும் பெண்கள் விடயத்தில் அரசாங்கம் தலையிடவேண்டும்.

மத்திய கிழக்கில் பல நாடுகளில் பிரச்னைகள் இருக்கின்றன -என்றார். (அ)

# கடந்த இருபது நாட்களில் மட்டும் 6,037 டெங்கு நோயாளர்கள் பதிவு

கொழும்பு, மே 23

கடந்த இருபது நாட்களில் நாட்டில் 6,037 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி, நாட்டில் இவ்வருடம் மொத்தமாக 35,745 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் கடந்த ஏப்ரல் மாதம் 7,617 நோயாளிகள் அடையாளம் காணப்பட்டனர்.

மார்ச் மாதத்தில் 6,419 பேரும் பெப்ரவரியில் 6,709 பேரும் அடையாளம் காணப்பட்டதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

நாட்டிலேயே அதிகூடிய டெங்கு நோயாளர்கள் கம்பஹா மாவட்டத்தில் இருந்து மேலும் பதிவாகியுள்ளனர்.

அதன்படி இவ்வருடம் கம்பஹா மாவட்டத்தில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 8,035 ஆகக் காணப்படுகின்றது.

டெங்கு நோய் பரவுவதைக் கட்டுப்படுத்துவதற்கு பொறுப்பான சில தரப்பினரிடம் இருந்து பெறும் பங்களிப்பு போதுமானதாக இல்லையென தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் சமூக வைத்தியர் இந்திக வீரசிங்க தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மத,இன மோதலை ஏற்படுத்தும் சூழ்ச்சிகளில் சிக்கவேண்டாம்!

## மக்களிடம் கோருகிறார் விஜித ஹேரத்

கொழும்பு, மே 23

**மதவாத, இனவாத மோதலை ஏற்படுத்தும் சூழ்ச்சிகளில் சிக்க வேண்டாம் என பொது மக்களை கேட்டுக்கொள்வதாக தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.**

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

யுத்தம் நடைபெற்ற காலத்தில் பயங்கரவாத குழுக்களுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் உதவியவர்கள் தற்போது போர் வெற்றியை அனுஷ்டிப்பது வரலாற்று விதி.

அன்று மே 26 ஆம் திகதி தேசிய ஐக்கியத்தை கட்டியெழுப்புவது தொடர்பான யோசனைகளை அரசாங்கத்துக்கு எழுத்து மூலம் வழங்கினோம். அதற்கு என்ன நடந்தது என்று தெரியவில்லை.

மே 19 ஆம் திகதியுடன் போரை முடிவுக்கு கொண்டு வந்து 14 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன.

பொருளாதாரத்தை வலுப்படுத்தவும் இனங்களுக்கு இடையில் தேசிய ஐக்கியத்தை கட்டியெழுப்பவும் போர் முடியும் வரை நாட்டு மக்கள் கண்களை திறந்து பார்த்துக்கொண்டிருந்தனர்.

முப்பது ஆண்டு போர் காலத்தில் போரை முடிவுக்கு கொண்டு வந்த பின்னர் நாட்டில் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பி அபிவிருத்தி செய்யப்போவதாக ஆட்சியாளர்கள் தொடர்ந்தும் கூறி வந்தனர்.

போர் நடைபெற்ற பிரதேசங்களில் விவசாயம், மீன்பிடி உட்பட ஏனைய உற்பத்திகள் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்ப முடியும் என ஆட்சியாளர்கள் கூறினர்.

எனினும் போர் முடிவுக்கு வந்து 14 ஆண்டுகள் முழுமையடைந்துள்ள நிலையில், நாட்டின் பொருளாதாரம் முற்றாக வீழ்ச்சியடைந்து, நாடு வங்குரோத்து அடைந்து, மக்கள் வாழ முடியாத நிலைமை உருவாகியுள்ளது.

அன்று போரின் பெயரில் பிரச்சினைகளை மூடி மறைத்த ஆட்சியாளர்களுக்கு நாட்டைக் கட்டியெழுப்ப எந்தத் திட்டங்களும் இல்லை என்பது ஒப்புவிக்கப்பட்டுள்ளது.



போர் நடைபெற்ற காலத்தில் ஆட்சி அதிகாரத்தை பெறவும் அதனை முன்னெடுத்துச் செல்லவும் மத மற்றும் இனவாதத்தை ஆட்சியாளர்கள் தூண்டினர் என்பதை மக்கள் புரிந்துகொண்டுள்ளனர்.

மக்களின் உணர்வுகளை தூண்டி, இன மற்றும் மத அடிப்படையில் பிரித்து பல்வேறு அணிகளை உருவாக்கி ஆட்சியாளர்கள் தமது அதிகாரத்தை முன்னெடுத்தனர்-என்றார். (அ)

# மக்கள் பிரதிநிதிகளின் சிறப்புரிமைகள் குறைப்பு

கொழும்பு, மே 23

தற்போதைய நிதியமைச்சரின் ஆட்சிக் காலத்தில் மக்கள் பிரதிநிதிகளின் பெரும்பாலான சிறப்புரிமைகள் குறைக்கப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

2021ஆம் ஆண்டுக்கான அரசாங்கத்தின் பாதீட்டில் பாராளுமன்ற உறுப்பினர்களின் வேதனம் நீக்கப்படும் எனக் கூறப்பட்டுள்ளபோதிலும் இதுவரை, எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என நிதி இராஜாங்க அமைச்சரிடம் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர்.

அதற்கு பதிலளித்த அவர், பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகளுக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகள் குறைக்கப்பட்டுள்ளன.

புதிய வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்கோ, புதிய வாகன அனுமதிப்பத்திரங்களைப் பெறுவதற்கோ தடையேற்பட்டுள்ளது.

உயர்ந்த வரி அறிவிட்டதன் பின்னரே, கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றன.

எனவே, கடந்த காலத்தை காட்டிலும் தற்போதைய நிதியமைச்சரின் ஆட்சிக்காலத்திலேயே மக்கள் பிரதிநிகளின் வரப்பிரசாதங்கள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார். (அ)

# இலங்கை முதலீட்டு சபைக்கு அமெரிக்கத் தூதுவர் விஜயம்!

கொழும்பு, மே 23

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங், இலங்கை முதலீட்டுச் சபைக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

இந்த விஜயத்தின்போது அவருடன் அமெரிக்க தூதுவராலயத்தை சேர்ந்த பொருளாதார அதிகாரிகளும் சென்றிருந்தனர்.

இலங்கையின் தற்போதைய முதலீடு குறித்த விவரங்களை அதிகாரிகளிடம் இருந்து அவர்கள் கேட்டறிந்து கொண்டனர்.

இந்த சந்திப்பின் போது, தற்போது இலங்கையில் முதலீடு செய்வதில் அமெரிக்க முதலீட்டாளர்கள் ஈடுபாடு கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# பொருளாதார நெருக்கடியிலிருந்து உதவிகள் மூலம் மீண்டது இலங்கை

## ஆசிய அபிவிருத்தி வங்கி சுட்டிக்காட்டு

கொழும்பு, மே 23

பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் இந்தியா உள்ளிட்ட வெளிநாடுகளின் உதவிகள் மூலம் இலங்கை அதன் முடங்கியிருந்த பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டுள்ளதாக ஆசிய அபிவிருத்தி வங்கியின் பொருளாதார ஆய்வு மற்றும் பிராந்திய ஒத்துழைப்புக்கான திணைக்களத்தின் ஆலோசகர் கணேசன் விக்னராஜா தெரிவித்தார்.

லண்டனில் உள்ள வெளிநாட்டு அபிவிருத்தி நிறுவனத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அத்துடன், இலங்கையின் அதிக கடனை சுட்டிக்காட்டி, தவறான பொருளாதார கொள்கையென விமர்சித்தனர்.

இலங்கையின் பொருளாதார நெருக்கடி, அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு எச்சரிக்கையான படிப்பினைகளை வழங்கும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை என அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 50 பில்லியனுக்கும் அதிகமான வெளிநாட்டுக் கடனை முன்கூட்டியே திருப்பிச் செலுத்தாத நிலைக்கு தள்ளப்பட்ட இலங்கை, ஒரு கடுமையான கொடுப்பனவுச் சமநிலை நெருக்கடி சூழல், பாரிய பொருளாதார பின்னடைவை ஏற்படுத்தியது.

2022 ஆம் ஆண்டு இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது 7.8 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது.

ஆண்டுக்கு ஆண்டு பணவீக்கம் செப்டம்பர் 2022ம் ஆண்டு 69.8 சமவீதமாக உயர்ந்துள்ளது.

இலங்கையின் பொருளாதார ஸ்திரத்தன்மையை அடைவதற்கான அறிகுறிகளைக் காட்டுவது தற்போது சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

அத்துடன், இலங்கையில் அடுத்த வருடம், மீண்டும் பொருளாதார வளர்ச்சி எதிர்பார்க்கப்படுகிறது.

சர்வதேச நாணய நிதியத்தின் கடந்த மாத முன்னறிவிப்பின் படி, 2023இல் 3.1 சதவீதமும், 2024ல், 1.5 சதவீதம் வளர்ச்சியும் குறைந்த பொருளாதாரச் சுருக்கத்தைக் குறிக்கிறது.

இலங்கைக்கான திருத்தப்பட்ட பொருளாதார கொள்கை கொந்தளிப்பான அரசியல் சூழலை அமைதிப்படுத்துவதன் மூலம் அது இலங்கையின் பொருளாதாரத்துக்கு அடித்தளமாக உள்ளது.



இது சாதாரண இலங்கையர்கள் தங்களது வாழ்க்கையை வாழ அனுமதித்துள்ளது-என்றார். (அ)

# எரிபொருள் விநியோகத்துக்கு நேற்று சினோபெக் நிறுவனத்துடன் ஒப்பந்தம்

கொழும்பு, மே 23

இலங்கையில் எரிபொருள் விற்பனை செய்வது தொடர்பில் சீனாவின் சினோபெக் நிறுவனத்துடனான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி செயலகத்தில் இந்த நிகழ்வு நேற்று இடம்பெற்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட விசேட குழுவின் பரிந்துரைகளைத் தொடர்ந்து, இலங்கையில் பெற்றோலியப் பொருட்களின் இறக்குமதி, சேமிப்பு, விநியோகம் மற்றும் விற்பனை தொடர்பான இந்த நீண்ட கால ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

சினோபெக் ப்யூயல் ஒயில் லங்கா (பிரைவேட்) லிமிடெட் மற்றும் சீனா, சிங்கப்பூரில் உள்ள அதன் தாய் நிறுவனத்துடன் பேச்சுவார்த்தைகள் முடிக்கப்பட்டுள்ள நிலையில் இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (அ)

# சீன பிரஜையை விடுவித்த அதிகாரிகளுக்கு சிக்கல்!

கொழும்பு, மே 23

போலியான கடவுச்சீட்டுக்களுடன் நாட்டுக்குள் நுழைய முயற்சித்த சீனப் பிரஜையை இராஜாங்க அமைச்சர் ஒருவர் தலையீடுகளை மேற்கொண்டு விடுதலை செய்துள்ளமை தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- டுபாயிலிருந்து இலங்கைக்கு வந்திருந்த சீனப் பிரஜையிடம் இரு கடவுச்சீட்டுக்கள் இருந்துள்ளன. எவ்வாறாயினும் சீனப் பிரஜைகள் வேறொரு நாட்டின் கடவுச்சீட்டுக்களை வைத்திருக்க முடியாது. கைது செய்யப்பட்டிருந்த இந்த சீனப் பிரஜை தற்போது விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

இந்த சீனப் பிரஜை மீண்டும் அழைக்கப்பட்டு விசாரணைகளை மேற்கொள்ள தீர்மானித்துள்ளோம். மேலும், இந்த விடயத்தில் சீன தூதரகத்தின் ஆலோசனைகளுக்கு அமையவே செயற்படுவோம்.

போலியானக் கடவுச்சீட்டுக்கள் இருந்தும், இவர்களை விடுதலை செய்த அதிகாரிகள் தொடர்பில் விசாரணைகள் நடைபெறும். இராஜாங்க அமைச்சர் மீது விசாரணைகள் மேற்கொள்ளப்படாது. யார் என்னகூறினாலும் அதிகாரிகள் சரியாக நடந்துகொள்ள வேண்டும்-என்றார். (அ)

ராஜன் குறை

# வெறுப்பரசியலை வேரறுக்கும் காங்கிரஸ் கட்சியின் கர்நாடகா வெற்றி!

எந்தவொரு தேர்தலிலும் ஆளும் கட்சி தோற்று, எதிர்க்கட்சி வெற்றி பெறுவது என்பது நடப்பதுதான். இதை அதிருப்தி வாக்குகளின் விளைவு, ஆங்கிலத்தில் ஆண்டி இன்கம்பென்ஸி ஓட் (ஆட்சிக்கு எதிரான வாக்கு) என்று கூறுவார்கள். ஒருவேளை தேர்தலில் வென்று ஆளும் கட்சியே தொடர்ந்து ஆட்சி செய்வது என்பது நிகழ்ந்தாலும், ஒரு சில தேர்தல்களுக்குப் பின் மாற்றத்தை மக்கள் நாடவே செய்வார்கள் என்பதையும் நாம் கண்டுள்ளோம்.

இதற்கான காரணம், மக்களுடைய எதிர்பார்ப்புகள் அனைத்தையும், அனைத்து தரப்பினரின் எதிர்பார்ப்புகளையும் நிறைவேற்றுவது என்பது எந்த ஆட்சிக்குமே கடினமானதுதான். இந்திய சமூகங்கள் பல்வேறு பொருளாதார, ஜாதீய அடுக்குகளைக் கொண்டவை, ஏற்றத்தாழ்வு நிறைந்தவை. இதில் சமத்துவத்தையும், சமூக நீதியையும் முழுமையாக சாத்தியமாக்குவது கடினமானது. வறுமை பெருமளவு குறைந்திருந்தாலும், மக்கள் நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டாலும் பெருவாரியான மக்கள் இன்னல்கள் நிறைந்த வாழ்க்கையினையே மேற்கொள்கிறார்கள்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சியின் பலன்கள் வசதி படைத்த பிரிவினருக்கு மேலும் ஊட்டத்தை அளிக்கும் அளவு அடித்தட்டு மக்களுக்குச் சென்று சேர்வதில்லை. அதனால் பல்வேறு அரசியல் கட்சிகளும், குறிப்பாக மாநில அரசியலில், அடித்தட்டு மக்களின் வாழ்வை மேம்படுத்த பல்வேறு நலத்திட்டங்களை அறிவிப்பதுடன், அவற்றை செயல்படுத்துவதும் அவசியமான தேவையாக உள்ளது. அதே நேரம், அதற்கான நிதி ஆதாரங்களை வரி விதிக்கும் அதிகாரமில்லாத மாநில அரசுகளால் உருவாக்கிக் கொள்வது கடினமாகவே இருக்கிறது.



## மதவாத அரசியல்

இந்த நிலையில்தான் பாரதீய ஜனதா கட்சி பெருவாரியான மக்கள் ஆதரவைப் பெற மத அடையாள அரசியல் செய்கிறது. சிறுபான்மை மதப் பிரிவினர், குறிப்பாக முஸ்லிம்கள் மீது வெறுப்பைத் தூண்டுவதன் மூலம், பெரும்பான்மையாக இந்துக்கள் என்று அடையாளப்படுத்தப்படும் சமூகப் பிரிவினரை ஒருங்கிணைக்க முயற்சி செய்கிறது. பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், வளர்ச்சியின் பலன்களை பகிர்ந்தளிப்பது ஆகியவற்றிலிருந்து மக்களைத் திசை திருப்ப அது மத அடையாள அரசியலை முன்வைக்கிறது.

இந்திய சுதந்திரத்துக்கு முன்பிருந்தே ஆர்.எஸ்.எஸ், ஹிந்து மகாசபா ஆகியவற்றின் அரசியல் இதுதான் என்றாலும், இருபத்தோராம் நூற்றாண்டில் புதியதொரு வேகத்துடன் தேர்தல்களை வெல்ல பாரதீய ஜனதா கட்சி வெறுப்பரசியலை நாடுகிறது எனலாம். இதற்கு சர்வதேச அளவில் செயல்படும் இஸ்லாமிய தீவிரவாத இயக்கங்களை வசதியாக சுட்டிக்காட்டி அச்சுறுத்துகிறது. இந்தியா முழுவதும் இந்த அணுகுமுறை இருந்தாலும், ஒவ்வொரு மாநிலத்திலும் அதன் தன்மைக்கேற்ப தனிப்பட்ட பிரச்சினைகளை எழுப்புகிறது.

உதாரணமாக மகாராஷ்டிரா, கர்நாடகாவில் 2015-2017 ஆண்டுகளில் பன்சாரே, தபோல்கர், கல்புர்கி, கௌரி லங்கேஷ் ஆகிய நான்கு சிந்தனையாளர்கள், எழுத்தாளர்கள் இந்து மதவாத அமைப்புகளைச் சேர்ந்தவர்களால் கொலை செய்யப்பட்டனர். இந்துராஷ்டிரம் அமைப்பதற்கு எதிரானவர்களை அழித்தொழிக்க வேண்டும் என்றெல்லாம் அத்தகைய அமைப்புகளின் பிரசுரங்களில் எழுதப்படுவதை பலர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

வெகுஜன அளவில் சமீபத்தில் கர்நாடக மாநிலத்தில் முஸ்லிம் கல்லூரி மாணவிகள் ஹிஜாப் (முக்காடு) அணிவதை தடை செய்து கலவரத்தை உருவாக்கியது. ஆங்கிலேயர்களை எதிர்த்துப் போராடி வீர மரணமடைந்த திப்பு சுல்தானை மத மாற்றம் செய்தவர் என்று புரளி பரப்பி, இந்துக்களுக்கு எதிரானவராக சித்தரிக்க முயற்சி செய்தது.

அண்டை மாநிலமான கேரளாவில் முஸ்லிம்கள் அதிகம் இருப்பதையும், அங்கே முஸ்லிம் தீவிரவாத அமைப்புகள் அதிகம் ஊடுருவதாகவும் கூறி வெறுப்புப் பிரச்சாரம் மேற்கொண்டது. முஸ்லிம்கள் தங்களுக்கு வாக்களிக்காவிட்டால் பரவாயில்லை என்று வெளிப்படையாக பாஜக தலைவர் ஈஸ்வரப்பா கூறினார். ஒரு முஸ்லிம் வேட்பாளரைக்கூட பாஜக நிறுத்தவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.



கேரள மாநிலப் பெண்கள் வெகுகாலமாக செவிலியர் பணியில் திறமை மிக்கவர்களாக உலகெங்கும் சென்று பணியாற்றி வருகின்றனர். இங்குள்ள இஸ்லாமிய சமூகத்தினர் அரேபிய நாடுகளில் பணி செய்து அனுப்பும் பணம் கேரள, இந்திய பொருளாதாரத்துக்கு வலு சேர்த்துள்ளது. உண்மை இப்படியிருக்க ஒட்டுமொத்தமாக கேரளாவையே இஸ்லாமிய தீவிரவாதிகளின் வேட்டைக்காடாக தவறாகச் சித்தரிக்கும்படியாக "தி கேரளா ஸ்டோரி" என்ற படம் ஒன்று பாஜக ஆதரவுடன் வெளிவந்தது. பிரதமரே இந்தப் படத்தை ஆதரித்து கர்நாடக மாநில தேர்தல் பிரச்சாரத்தில் பேசினார்.

## ஏன் இந்த வெறுப்புப் பிரச்சாரம்?

பாரதீய ஜனதா கட்சியை கர்நாடகாவில் 2008ஆம் ஆண்டு முதல் முறையாக ஆட்சியில் அமரச் செய்தவர் பி.எஸ்.எடியூரப்பா. ஆனால், இவருக்கு எதிராக ஊழல் குற்றச்சாட்டுகளில் தீர்ப்பளிக்கப்பட்டதால் பதவி விலக நேர்ந்தது. பின்னர் அதன் காரணமாக பாரதீய ஜனதா கட்சியிலிருந்தே விலகி தனிக் கட்சி கண்டார். அடுத்த வந்த 2013 தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெற்றது. எடியூரப்பா இல்லாமல், அவருக்குள்ள லிங்காயத்து சமூகத்தினரின் ஆதரவு இல்லாமல், தேர்தலில் வெற்றி பெற முடியாது என்பதால் பாஜக இவரை மீண்டும் கட்சியில் சேர்த்துக்கொண்டது.

ஆனாலும்கூட 2018ஆம் ஆண்டு தேர்தலில் அவரால் தனிப்பெரும்பான்மை பெற முடியவில்லை. பதவிவேற்றவுடனேயே பெரும்பான்மை இல்லாததால் ராஜினாமா செய்தார். காங்கிரஸ் கட்சி ஆதரவுடன் கூட்டணி அமைச்சரவை அமைத்து மதச்சார்பற்ற ஜனதா தள தலைவர் குமாரசாமி முதல்வரானார். ஆனால், கூட்டணியில் பல விரிசல்கள் இருந்தன. எடியூரப்பா ஓராண்டுக் காலத்திற்குள் வரலாறு காணாத குதிரை பேரத்தில் ஈடுபட்டு, சட்டமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்கி ஆட்சியைக் கவிழ்த்தார். அவர் தலைமையில் ஆட்சி அமைத்தார்.

இரண்டாண்டுகள் கழித்து அவருக்கு வயதானதை காரணம் சொல்லி பாரதீய ஜனதா கட்சி தலைமை அவரை பதவி விலகச் சொன்னது. அவருக்கு பதில் எஸ்.ஆர். பொம்மை முதல்வரானார். அவர் ஆட்சியில் ஊழல் தலைவிரித்து ஆடியது. அரசாங்க ஒப்பந்தக்காரர்கள் தங்களிடம் நாற்பது சதவிகிதம் கமிஷன் கேட்கப்படுவதாக வெளிப்படையாக அறிவித்தார்கள். ஒரு ஒப்பந்தக்காரர் ஊழலுக்கு ஈடுகொடுக்க முடியாமல் தற்கொலையே செய்து கொண்டார்.

திறமையற்ற ஆட்சி, வரைமுறையற்ற ஊழல் என்று கடுமையான அவப்பெயர் ஈட்டிய ஆட்சியை, கட்டுமான வளர்ச்சியை மட்டும் காட்டி காப்பாற்ற முடியாது என்பதால்தான் வெறுப்பரசியலில் தீவிரமாக ஈடுபட்டார்கள். கர்நாடக மாநில ஊடகங்களும் பெருமளவு பாஜக-வுக்கு ஆதரவாகத்தான் இயங்குபவை எனப்படுகிறது.

## புனித அரசியல் பிம்பம்

பாரதீய ஜனதா கட்சியிலும் உட்கட்சிப் பூசல்களும், ஊழல் பெருச்சாளிகளும் அதிகம். ஆனால் காங்கிரஸ் கட்சியின் மீது ஊழல் குற்றச்சாட்டுகள் எழும்போது அவற்றை பூதாகரமான பிரச்சினையாக்கி தேர்தல் களத்தை வடிவமைக்கும் ஊடகங்கள், பாஜக மீதான குற்றச்சாட்டுகளைப் பெரிதுபடுத்தாமல் விட்டுவிடுவதே வழக்கம்.

உதாரணமாக ராஜீவ் காந்தி ஆட்சியில் போபர்ஸ் பீரங்கிகளை வாங்கியதில் ஊழல் நடந்துவிட்ட து என்று பெரும் பிரச்சாரத்தில் ஈடுபட்டன ஊடகங்கள். ராஜீவ் காந்தி 1989 தேர்தலில் தோல்வி அடையும் அளவு இந்த பிரச்சாரம் நடந்தது. ஆனால், அதன் பின்னர் அந்த குற்றச்சாட்டுகள் எதுவுமே நிரூபிக்கப்படவில்லை. ஒரு சில தரகர்கள் கமிஷன் பெற்றார்கள் என்று கூறப்பட்டதே தவிர அதனால் இந்திய அரசுக்கு என்ன இழப்பு என்பது நிறுவப்படவில்லை.

அதே போல தொலைபேசி அலைக்கற்றை விற்பனை தொடர்பாக 2பு ஊழல் என்று மிகப்பெரிய பிரச்சாரம் மன்மோகன் அரசுக்கு எதிராகவும், அதில் அங்கம் வகித்த தி.மு.க-வுக்கு எதிராகவும் மேற்கொள்ளப்பட்டது. வினோத் ராய் என்ற கணக்காயர் உருவாக்கிய கற்பனை இழப்பான 1,72,000 கோடி ரூபாய் என்பது கடுமையாக பிரச்சாரம் செய்யப்பட்டது. இறுதியில் ஊழலுக்கு எந்த ஆதாரமும் இல்லை என்று வழக்கு முடித்து வைக்கப்பட்டது.

இவற்றுடன் ஒப்பிட்டால் ரபேல் விமான பேரத்தில் காங்கிரஸ் ஆட்சி போட்ட ஒப்பந்தத்தை ஏன் பாஜக அரசு மாற்றியது, பன்மடங்கு அதிக விலைக்கு வாங்க முன்வந்தது, அதில் அனில் அம்பானி எதற்காக இணைக்கப்பட்டார் என்ற பல கேள்விகளை காங்கிரஸ் கட்சியும், பத்திரிகையாளர்களும் எழுப்பினாலும், ரபேல் ஊழல் என்பதை ஊடகங்கள் பெரிது படுத்தவில்லை.

அதே போல மத்தியப் பிரதேசத்தில் பாஜக ஆட்சியில் வியாபம் என்ற பெயரில் அரசுத் தேர்வுகளில் மிகப்பெரிய மோசடி நடந்திருப்பது வெளியானாலும் அதனால் பாஜக கட்சிக்கோ, அந்த மாநில முதல்வர் சிவராஜ் சௌஹானுக்கோ பெரிய அவப்பெயர் எதுவும் ஏற்படுவதில்லை. அவர்தான் இப்போதும் ஆட்சி செய்கிறார்.

குஜராத்தில் மோர்பி என்ற இடத்தில் தகுதியற்ற ஒரு நிறுவனத்தால் கட்டப்பட்ட தொங்கு பாலம் உடைந்து விழுந்ததில் நூற்றுக்கணக்கானவர்கள் உயிரிழந்தனர். வேறு கட்சி ஆட்சியில் இது நடந்திருந்தால் பெரிய பிரச்சினையாகியிருக்கும். பாஜக ஆட்சி என்பதால் சுலபத்தில் மறக்கப்பட்டு விட்டது. இது ஓர் உதாரணம்தான். இன்னும் பல பிரச்சினைகளைக் கூற முடியும்.

இப்போது கௌதம் அதானியின் பிரம்மாண்ட பங்குச் சந்தை முறைகேடுகள், வங்கிகள், ஆயுள் காப்பீட்டுக் கழகம் ஆகியவை அவருக்கு வழங்கியுள்ள ஆதரவு ஆகியவை குறித்து கடுமையான கேள்விகள் எழுந்தாலும் ஊடகங்கள் இதையெல்லாம் பிரச்சினையாகாமல் பார்த்துக் கொள்கின்றன.



இதற்கெல்லாம் என்ன காரணம் என்று சிந்தித்தால் பாஜக சனாதன தர்மம். சமஸ்கிருதம், ராமர் கோயில், இந்து மதம், புண்ணிய பூமி என்று பழைய பார்ப்பனீய புனித சொல்லாடல்களைப் பேசுவதும், இந்தியாவின் கருத்தியல் மேலாதிக்க சக்திகளுக்கு, உயர்ஜாதி உயர்மத்தியதர வர்க்கத்துக்கு இது உவப்பாக இருப்பதும்தான்.

காங்கிரஸ் கட்சியும் சரி, பிற பார்ப்பனரல்லாதோரின் மாநிலக் கட்சிகளும் சரி மதச்சார்பின்மை, மக்கள் நலன் என்று பேசுகின்றன. பாஜக பேசும் பழமைவாத புனிதவாத சொல்லாடலைப் பேசுவதில்லை. பாஜக-வின் புனிதவாதம் ஊழல் குற்றச்சாட்டுகள் அதன் மேலே ஒட்டாமல் பார்த்துக் கொள்கிறது.

இதற்கு மாறாக அடித்தட்டு மக்கள் நலனை முன்னிறுத்தி அரசியல் செய்வதை மேல்தட்டு வர்க்கத்தினர் ரசிப்பதில்லை. நலத்திட்ட உதவிகளை "இலவசங்கள்" என்று சர்க்கார் பட இயக்குநர் முருகதாஸ் போல வெறுக்கின்றனர். பிரதமர் மோடி "ரேவ்டி கல்ச்சர்" என்று இலவசங்களைக் கண்டிக்கிறார். ஆனாலும் அவர் கட்சியும் உத்தரப் பிரதேசத்தில் தேர்தலைச் சந்திக்க இலவசங்களை அறிவித்தது.

## மக்கள் நலன் அரசியல்

ஊடகங்கள் என்னதான் திரைபோட்டு மறைத்தாலும், மக்களுக்கு ஆட்சியின் குளறுபடிகள் நேரடியாகத் தெரிந்து விடுகிறது. அடித்தட்டு மக்கள் வெறுப்பரசியலை விரும்புவதில்லை. அமைதியான வாழ்க்கையை அது சீர்குலைப்பதை புரிந்துகொள்கிறார்கள். அவர்களுக்குப் பொருளாதார நெருக்கடியிலிருந்து விடுபடுவதற்குத்தான் வழிகள் தேவைப்படுகின்றன.

காங்கிரஸ் கட்சியும் சரி, அதனுடன் கூட்டுச் சேரும் மாநில கட்சிகளும் சரி, மக்கள் நல திட்டங்களைத்தான் அரசியலின் இலக்கு என நம்புகின்றன.

(09ஆம் பக்கம் பார்க்க)

# குழந்தைகள் மன ஆரோக்கியத்திற்கு எமனாகும் ‘ஸ்மார்ட் போன்’?

சுசீலா சிங்



சிறுவயதிலேயே குழந்தையின் கையில் திறன்பேசி (ஸ்மார்ட் போன்) அல்லது டேப்லெட் கொடுப்பது அதன் அறிவை மேம்படுத்தும் அல்லது டிஜிட்டல் உலகத்தைப் பற்றிய புரிதலை அதிகரிக்கும் என்று நீங்கள் நினைத்தால் அது தவறு.

இதை **‘Sapien Labs’** என்ற அமெரிக்க அரசு சாரா நிறுவனம் தெரிவிக்கிறது.

இந்த அமைப்பு 2016 முதல் மக்களின் மனதைப் புரிந்துகொள்ளும் பணியில் செயல்பட்டு வருகிறது.

கொரோனா காலத்தில் குழந்தைகளின் கல்வி ஆன்லைனில் தொடங்கியபோது, குழந்தைகள் மொபைலில் எவ்வளவு நேரம் ஸ்க்ரீன் டைம் இருக்க வேண்டும் என்ற பேச்சு தொடங்கியது. அதன் நன்மைகள், தீமைகள் குறித்த விவாதம் தொடங்கியது.

**அறிக்கையில் கூறப்பட்டிருப்பது என்ன?**

குழந்தைகளுக்கு சிறு வயதிலேயே திறன்பேசிகள் (ஸ்மார்ட்போன்) கொடுக்கப்படும்போது, அவர்கள் பருவமடைவதற்குள் அவர்களின் மூளை எதிர்விளைவைக் காட்டத் தொடங்குகிறது என்று **Sapien Labs** இன் சமீபத்திய அறிக்கை தெரிவிக்கிறது.

திறன்பேசிகளால் பெண்களுக்கு ஏற்படக்கூடிய மனநல பாதிப்புகள் கோபப்படுவது, மனநிலையில் அடிக்கடி மாற்றம் ஏற்படுவது, யதார்த்தத்தை விட்டு விலகியிருப்பது, கெட்ட கனவு, சிடுசிடுப்பு, பிரமை, தற்கொலை எண்ணம், குழப்பம்.

40 நாடுகளைச் சேர்ந்த 2,76,969 இளம் வயதினரிடம் பேசி இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டது. இந்த ஆண்டு ஜனவரி முதல் ஏப்ரல் வரையிலான மாதங்களில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த 40 நாடுகளில் இந்தியாவும் அடக்கம்.

ஆறு வயதில் திறன்பேசி வழங்கப்பட்ட 74 சதவிகித பெண்களுக்கு இளமைப்பருவத்தில் மனநல பிரச்னைகள் ஏற்பட்டதாக இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.



இந்தப் பெண்களின மன ஆரோக்கியம் தொடர்பான மதிப்பீடு குறைவாக இருந்தது. 10 வயதில் திறன்பேசிகள் வழங்கப்பட்ட பெண்களில், 61 சதவிகிதம் பேரின் மன ஆரோக்கியம் தொடர்பான மதிப்பீடு குறைவாக அல்லது மோசமாக இருந்தது. 15 வயதுடைய சிறுமிகளில் 61 சதவிகிதத்தினரின் நிலையும் இதேதான்.

மறுபுறம், 18 வயது பெண்களுக்கு திறன்பேசிகள் கிடைத்தபோது, இந்த எண்ணிக்கை 48 சதவிகிதமாக மட்டுமே இருந்தது.

அதேநேரம் ஆறு வயது சிறுவர்களுக்கு திறன்பேசிகள் வழங்கப்பட்டபோது, 42 சதவிகிதம் பேருக்கு மட்டுமே அது குறைந்திருந்தது.

இதற்கு எந்த அறிவியல் அடிப்படையும் இல்லை என்றும் இது இன்னும் முழுமையாகப் புரிந்து கொள்ளப்படவில்லை என்றும் சப்தர்ஜங் மருத்துவமனையில் பணியாற்றிய முன்னாள் மனநல மருத்துவர் பங்கஜ் குமார் வர்மா கூறுகிறார்.

ஆண் குழந்தைகளுடன் ஒப்பிடுகையில், சிறுமிகளுக்கு இளமைப் பருவம் முன்னதாகவே வருவதே இதற்கு ஒரு காரணமாக இருக்கலாம். இதில் மன மற்றும் உடல் மாற்றங்களும் அடங்கும் என்று அவர் கூறினார்.

சிறுமிகளுக்கு இளம் வயதில் திறன்பேசிகள் கொடுக்கப்படும்போது அவர்கள் இந்த நிலையை அடையும் நேரத்தில் ஆண்களைவிட அதிகமாகப் பாதிக்கப்படுகிறார்கள்.



சிறுவயதிலேயே திறன்பேசிகள் கொடுக்கப்பட்ட குழந்தைகளிடையே தற்கொலை எண்ணம், பிறர் மீது கோபம், யதார்த்தத்தை விட்டு விலகியிருப்பது, பிரமை போன்றவை இருப்பதாகவும் இந்த ஆய்வில் கூறப்பட்டுள்ளது.

18 முதல் 24 வயதினரிடையே எத்தனை காலம் கழித்து அவர்களுக்கு திறன்பேசி கொடுக்கப்பட்டதோ அத்தனை குறைவாக மனநலம் மீது விளைவு இருந்தது.

**குழந்தைகள் மீது விளைவு**

சவியின் (பெயர் மாற்றப்பட்டுள்ளது) கதையும் ஏறக்குறைய இதுபோன்றதுதான். அவர் இரண்டு மகள்களின் தாய்.

அவர் வழக்கமாக வீட்டு வேலைகளில் பிசியாக இருப்பார். தன் மகள் அதிகம் தொந்தரவு செய்யக்கூடாது என்பதற்காக தன் 22 மாத மகளிடம் தனது திறன்பேசியைக் கொடுத்தார்.

யூடியூபில் கார்ட்டூனை போட்டு தன் மகளிடம் போனை கொடுத்துவிட்டு வீட்டு வேலைகளைச் செய்யத் தொடங்குவார் சவி. மூத்த மகள் பள்ளியிலிருந்து திரும்பும் வரை இது நடக்கும். தன் அறியாமையால் மகளின் கைகளில் கொடுத்த திறன்பேசி தனக்குப் பிரச்னையாகிவிடும் என்று சவி நினைக்கவே இல்லை.

“சவி தன் மகளை அழைத்து வந்தபோது, அவளால் தன் வயதுக்கேற்ப பேச முடிந்தது. குழந்தையின் வளர்ச்சியும் சரியாக இருந்தது. ஆனால் அவளிடம் மிகுந்த பதட்டம் இருந்தது,” என்று மனோதத்துவ நிபுணர் டாக்டர் பூஜா சிவம் கூறினார்.

“ஏழு முதல் எட்டு மணிநேரம், அவள் திறன்பேசியுடன் மட்டுமே வாழ்ந்தாள். சவி யூடியூப்பில் கார்ட்டூன் போட்டிருப்பார். ஆனால் யூடியூப்பில் அவள் எதைப் பார்த்திருப்பாள் என்று கற்பனை செய்து பாருங்கள், நம்மால் யூகிக்க மட்டுமே முடியும்,” என்று அவர் குறிப்பிட்டார்.

“அவள் பயத்துடன் இருப்பாள். பதட்டம் இருந்தது. வீட்டுக்குப் புதிதாக யாராவது வந்தாலே கத்த ஆரம்பிப்பாள். பயந்து போய்விடுவாள். இதில் பேசாமல் இருப்பதும், பிடிவாதமாக இருப்பதும் அடங்கும். அதன் பிறகு அந்தப் பெண்ணை திறன்பேசியில் இருந்து அகற்றிவிட்டு கவுன்சிலிங் தொடங்கினோம்.”

இப்போதெல்லாம் பெற்றோர்கள் குழந்தைகளின் கைகளில் சிறு வயதிலேயே பேசிபையர் (நிப்பிள், ஷெல்ஸ் மற்றும் கைப்பிடி கொண்ட சூதர்) போன்களை வழங்குகிறார்கள் என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.

**குழந்தைகளின் மூளையில் ஏற்படும் விளைவுகள்**

பல ஆயிரம் விஷயங்கள் சிக்னல்கள் மூலம் நம் மூளையை அடைகின்றன என்று உளவியலாளர்கள் கூறுகின்றனர்.

ஒருவர் திறன்பேசியைப் பயன்படுத்தும்போது, அவருக்கு வீடியோ மற்றும் ஆடியோ கிடைக்கிறது. அதே நேரத்தில் அவருக்கு உற்சாகத்தையும் ஆர்வத்தையும் ஏற்படுத்தும் வேறு சில விஷயங்களும் மனதில் நுழைகிறது. மேலும் இது ஒரு காந்தம் போல வேலை செய்கிறது.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் குழந்தைக்கு இப்படி நடக்கும்போது என்ன ஆகும் என்று நினைக்கிறீர்கள்?

டாக்டர் பங்கஜ் குமார் வர்மா, ரிஜூவனேட் மைண்ட் கிளினிக்கையும் நடத்தி வருகிறார்.

இந்தக் கேள்விக்கு பதிலளித்த அவர், “கொரோனா காலத்தில் திரை நேரம் அதிகரித்ததால், வீடுகளில் அடைத்து வைக்கப்பட்டதால் குழந்தைகள் எரிச்சல், கவலை மற்றும் மனச்சோர்வுக்கு ஆளானதைப் பார்த்தோம்,” என்று குறிப்பிட்டார்.

“சிறு குழந்தைகளில் மூளை வளர்ந்து வருகிறது. தான் பார்ப்பது நல்லதா கெட்டதா என்றுகூட அதற்குத் தெரியாது. இரண்டாவதாக, ஒரு கார்ட்டூனை பார்க்கும்போது குழந்தை நன்றாக உணர்ந்தால், மூளை டோபமைன் என்ற வேதிப்பொருளை வெளியிடுகிறது. இது குழந்தையை மகிழ்ச்சியாக உணர வைக்கிறது,” என்று அவர் மேலும் விளக்குகிறார்.

டிஜிட்டல் எக்ஸ்போஷர் ஒரு வகையில் குழந்தைகளை அதற்கு அடிமையாக்கிவிட்டது. அதன் விளைவு என்னவென்றால், படிப்பு, விளையாட்டு, நண்பர்களுடன் பழகுவது போன்ற அனைத்தையும் மறந்துவிட்டு, டோபமைனை தரும் திறன்பேசியிலேயே குழந்தை மூழ்கிவிடுகிறது. இந்த வழியில் ஒரு செயற்கை உலகில் அது வாழ்கிறது.

அத்தகைய சூழ்நிலையில், அவர்கள் பயம், குழப்பம், பதட்டம் போன்றவற்றுக்கு ஆளாவதால் வருங்காலத்தில் இதனால் பாதிப்பு ஏற்படுகிறது. மறுபுறம், சமூக கட்டமைப்பில் இருப்பதால் ஏற்படும் குழந்தைகளின் வளர்ச்சி பாதிக்கப்படுகிறது. இது எதிர்காலத்தில் அவர்களுக்கு மோசமான விளைவை ஏற்படுத்துகிறது.

●

# வெறுப்பரசியலை வேரறுக்கும்...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

மன்மோகன் சிங் காங்கிரஸ் ஆட்சிதான் நூறு நாள் வேலைத்திட்டம் எனப் படும் மன்ரேகா என்ற புரட்சிகர திட்டத்தை கிராமப்பு றங்களில் நடைமுறைப்படுத்தியது. இது வறுமையிலி ருந்து மக்களை காப்பதில் முக்கிய பங்கு வகித்தது. பார தீய ஜனதா அரசு இந்தத் திட்டத்தை பலவீனப்படுத்தி வருகிறது.

தமிழ் நாட்டில் திராவிடக் கட்சிகள் தொடக்கத்திலிருந்து சாமானியர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதையே அரசியலாகக் கொண்டுள்ளன. தி.மு.க பொது விநியோகத் திட்டத்தை விரிவாக்கி மேம்படுத்துவதில் முன்னோடியாக இருந்தது. நியாய விலைக்கடைகள் என்று அறியப்பட்ட இவற்றில் வறுமையிலுள்ள மக்களுக்குக் குறைந்த விலையில் அரிசி கிடைத்தது. காலப் போக்கில் இது இலவச அரிசியானது.

எம்.ஜி.ஆர் ஆட்சியில் பள்ளிகளில் மதிய உணவுத் திட்டம் சத்துணவு திட்டமாக மாறியது. அது தி.மு.க, அ.தி.மு.க ஆட்சிகளில் தொடர்ந்து படிப்படியாக மேம்படுத்தப்பட்டது. சென்ற ஆண்டு முதல்வர் ஸ்டாலின் அரசு காலைச் சிற்றுண்டியையும் பள்ளிகளில் வழங்க முன்வந்துள்ளது. பெண்களுக்கு இலவச பேருந்து பயணம், தகுதி பெறும் குடும்பத் தலைவிகளுக்கு ஆயிரம் ரூபாய் மாத உரிமைத் தொகை என பல புரட்சிகர திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

இவற்றை அடியொற்றி கர்நாடகாவில் வெறுப்பரசியலுக்கு மாற்றாக மக்கள் நல அரசியலை முன்வைத்தது காங்கிரஸ் கட்சி. ஐந்து உத்தரவாதங்களை அது மக்களுக்கு வழங்கியுள்ளது.

ஒன்று, கிரஹ லட்சுமி: குடும்பத்தலைவிகளுக்கு மாதம் இரண்டாயிரம் ரூபாய் உதவித் தொகை.

இரண்டு, யுவ நிதி: வேலையற்ற பட்டதாரிகள், டிப்ளமோ பெற்றவர்களுக்கு இரண்டு ஆண்டுகளுக்கு ரூபாய் மூவாயிரம் மற்றும் ஆயிரத்து நூறு உதவித்தொகை.

மூன்று, அன்ன பாக்யா: வறுமைக்கோட்டிற்கு கீழுள்ள குடும்பங்களில் ஒரு நபருக்கு மாதம் பத்து கிலோ அரிசி இலவசம்

நான்கு, கிருஹ ஜோதி: அனைத்து இல்லங்களுக்கும் 200 யூனிட் இலவச மின்சாரம்

ஐந்து, சகி திட்டம்: பெண்கள் பேருந்துகளில் இலவச பயணம் மேற்கொள்ள வகை செய்யும் திட்டம்.

இது போன்ற மக்கள் நல திட்டங்களை ஐம்பத்தாறு ஆண்டுகளாக பொருளாதார வளர்ச்சியின் அங்கமாக திராவிட அரசியல் மாற்றிக்காட்டியதால் இதனை திராவிட மாடல் என்று கூறுகிறோம். அது இப்போது அனைத்து மாநிலங்களிலும் அரசியலின் திசைவழியாக மாறுவதையே கர்நாடக மாநிலத்தில் காங்கிரஸின் வெற்றி உணர்த்துகிறது.

இதனுடன் இணைந்தே காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி மேற்கொண்ட பாரத் ஜாடோ என்ற தேச ஒற்றுமை நடைப்பயணத்தையும் காண வேண்டும். கர்நாடக மாநிலத்தில் பெருந்திரள் பங்கேற்புடன் நடந்தேறிய இந்தப் பயணம் வெறுப்பின் சந்தைக்குப் பதிலாக அன்பின் அங்காடிகளை திறந்ததாக ராகுல் காந்தியின் வார்த்தைகளில் கூறுவது பொருத்தமே.

வெறுப்பரசியலின் நோக்கம் தேர்தல் வெற்றியும், ஆட்சியதிகாரத்தை கைப்பற்றுவதும்தான் என்றால் அந்த நோக்கம் வேரறுக்கப்பட்டுள்ளது. அது நாடெங்கும் சமூக நல்லிணக்கத்தை விரும்புவோர் மனதில் நம்பிக்கையை விதைத்துள்ளது.

●

# நடிகை, சட்டத்தரணிகளிடம் திருமணம் செய்வதாக கூறி ரூ.16 மில்லியன் மோசடி

கொழும்பு, மே 23

முகநூல் கணக்கு மூலம் நடிகை ஒருவருடன் நட்பாக பழகி, திருமணம் செய்து கொள்வதாக உறுதியளித்து ரூ.6.5 மில்லியன் மோசடி செய்த நபரை மினுவாங்கொடை நீதிவான் டி.தெனபாது விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டுள்ளார்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர் கொழும்பு மற்றும் கம்பஹா நீதிமன்றங்களில் கடமையாற்றும் இரண்டு இளம் சட்டத்தரணிகளுடன் நட்பாக பழகி அவர்களை திருமணம் செய்து கொள்வதாக உறுதியளித்து இருவரிடமும் ரூ. 9.9 மில்லியன் வரை பணம் மோசடி செய்திருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

சந்தேகநபர் மஹர சிறைச்சாலையினரால் மினுவாங்கொடை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

கஹவத்தை இரத்தினபுரியைச் சேர்ந்த லசந்த லியனகே (வயது-27) என்ற சந்தேக நபரே கொழும்பு மோசடி விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

மினுவாங்கொடை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட இந்த வழக்கில், கொழும்பு பல்கலைக்கழகத்தில் அழகியல் கற்கை நெறியை மேற்கொள்வதுடன், நடிகையாக பணி புரிந்து வரும் மினுவாங்கொடை, பட்டதுவன பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்ட, 23 வயதான யுவதியே பாதிக்கப்பட்டவர் என குறிப்பிடப்பட்டது.

சந்தேக நபர் இலங்கையின் பிரபல கிரிக்கெட் வீரர்கள் மற்றும் நடிகர் நடிகைகளுடன் போஸ் கொடுத்த புகைப்படங்களுடன் பேஸ்புக் கணக்கை ஆரம்பித்துள்ளதாகவும், அவர் சமூக நல ஆர்வலராக செயற்படுவதாகவும் தெரிவித்துள்ளதாக பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்தனர்.

சந்தேகநபர் முகநூல் ஊடாக யுவதியுடன் நட்பை வளர்த்து வந்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். பின்னர் யுவதின் வீட்டிற்கு பலமுறை சென்று வந்துள்ளார்.

இருவருக்கும் இடையே காதல் மலர்ந்ததையடுத்து, மனுதாரரின் பெற்றோரும் திருமணத்துக்கு ஆசீர்வாதம் வழங்கியதாக நீதிமன்றத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன் பிறகு, சந்தேக நபர் பல்வேறு தேவைகளை முன்வைத்து நடிகையிடம் தனது வங்கிக் கணக்கில் ரூ.6.5 மில்லியன் ரூபா பெற்றுள்ளார்.

சந்தேகநபர் கொழும்பு நீதிமன்றில் பணிபுரியும் சட்டத்தரணி ஒருவரை திருமணம் செய்து கொள்வதாக உறுதியளித்து, அவரிடம் இருந்து ரூ. 5.5 மில்லியன் மற்றும் கம்பஹா நீதிமன்றத்தின் மற்றுமொரு சட்டத்தரணியை ஏமாற்றி அவரை திருமணம் செய்து கொள்வதாக உறுதியளித்து ரூ. 4.9 மில்லியன் மோசடி செய்துள்ளதும் தெரிய வந்துள்ளது.

மேற்கூறிய இரண்டு நீதிமன்றங்களாலும் இந்த இரண்டு குற்றங்களுக்காகவும் அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என மினுவாங்கொடை நீதவான் நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டது.

(அ)

# வாக்குச்சீட்டு அச்சடிப்பது இனிமேல் தனியாருக்கு!

கொழும்பு, மே 23

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான வாக்குச் சீட்டுகள் உட்பட தேர்தலின்போது செய்யப்படும் அனைத்து அச்சிடும் பணிகளையும் தனியாரிடம் ஒப்படைப்பது குறித்து கவனம் செலுத்தி வருவதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

கடந்த காலங்களில் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்க அச்சகம் போன்ற நிறுவனங்கள் இடையூறு ஏற்படுத்தியதன் காரணமாக எதிர்வரும் தேர்தலில் அச்சடிக்கும் பணிகளை தனியாரிடம் ஒப்படைப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக அதன் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்தார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பில் அரசாங்க அச்சகத்தினால் மேற்கொள்ளப்படும் அச்சுப் பணிகளுக்கு பணம் பெறும் முறை தொடர்பிலும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா கருத்து வெளியிட்டார்.

(அ)

# நீரில் மூழ்கி மாணவி பலி!

கொழும்பு, மே 23

முந்தலம பொலிஸ் பிரிவுக் குட்பட்ட புலிச்சகுளம் ஏரியில் நீராடச் சென்றவர்கள் மத்தியில் பாடசாலை மாணவி ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

நேற்று முன் தினம் குறித்த குழுவினர் நீராடச் சென்றுள்ள நிலையில், இம்முறை சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள உடப்புவ பிரதேசத்தை சேர்ந்த 17 வயதுடைய மாணவி ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த மாணவி, நான்கு நண்பிகள் மற்றும் ஒரு நண்பியின் பாட்டி ஆகியோர் புச்சகுளம வாவியில் நீராடும்போது இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் முந்தலம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# மோட்டர் சைக்கிள் விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் மரணம்



மட்டக்களப்பு, மே 23

மட்டக்களப்பு - கொக்குவில், குப்பிளாமடு பிரதேசத்தில் மழைநீர் வழிந்தோடும் வடி கால் பள்ளத்தின் ஊடாக பிர யாணித்த மோட்டார் சைக்கிள் வீதியை விட்டுவிலகி மரத்துடன் மோதியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குப்பிளாமடு பிரதேசத்தைச் சேர்ந்த 53 வயதுடைய லோகிதராஜா கோவிந்தராஜா என்பவரே உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் நேற்று முன்தினம் இரவு 8.30 மணிக்கு மட்டக்களப்பில் இருந்து வீடு நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்றபோது குப்பிளாமடு வீதியின் குறுக்கே மழைநீர் வழிந்தோடும் பள்ளத்தில் இருந்து மேலே செல்லும்போது மோட்டார் சைக்கிள் வீதியை விட்டு விலகி மரத்துடன் மோதியதில் சம்பவ இடத்திலே அவர் உயிரிழந்தார்.

உயிரிழந்தவரின் சடலம் பிரேதபரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொக்குவில் போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)






# செல்போன் போதையால் வடக்கு-கிழக்கில் வாசிப்பு வீதம் குறைவடைந்து வருகின்றது!

கலையரசன் எம்.பி கவலை

காரைதீவு, மே 23

**"போதைப்பொருட்களைவிட மிகவும் மோசமானது செல்போன் என்ற போதையாகும். இந்த செல்போன் கலாசாரத்தால் வடக்கு கிழக்கில் வாசிப்பு கலா சாரம் பொதுவாக குறைந்து வருகிறது."**



இன்று பாடசாலை மாணவர்கள் இந்த செல்போன் கலாசாரத்தால் மிகவும் மோசமாக படிப்பை இழந்து வருகிறார்கள். வாசிப்பை தவிர்க்கிறார்கள். சமுதாயத்தில் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை சகலரும் எப்பொழுதும் செல்போனை நோண்டிக் கொண்டிருக்கின்ற ஒரு அவலத்தை பார்க்கின்றோம். சமூகத்தின் நல்லது நடக்கின்ற பொழுது அதைத் தட்டிக் கொடுப்பதை விடுத்து அதில் குறை காண்கின்ற ஒரு சமூகமாக நாங்கள் மாறிக் கொண்டிருக்கிறோம். எமது சமூகம் வளரவேண்டுமாக இருந்தால் புதிய புதிய கண்டுபிடிப்புகளை கண்டுபிடித்து அதனூடாக நாங்கள் வெற்றி அடைய வேண்டும். -என்றார்.

நூலாசிரியர் டேவிட் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

(அ)

-இவ்வாறு காரைதீவில் நடைபெற்ற நூல் வெளியீட்டு விழாவில் உரையாற்றிய அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் கவலை தெரிவித்தார்.

காரைதீவு கோட்டக்கல்விப் பணிப்பாளர் பைந்தமிழ்க்குமரன் ஜே.டேவிட் எழுதிய "கறையான்தின்றகனவுகள்" என்ற சிறுகதை நூல் வெளியீட்டு விழா அதிபர் எஸ்.மணிமாறன் தலைமையில் காரைதீவு இ.கி.மி பெண்கள் வித்தியாலயத்தில் வெகு விமரிசையாக இடம்பெற்றது.

இவ் விழாவிற்கு பிரதம அதிதியாக இலங்கை தமிழரசுக் கட்சியின் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

மேலும் கௌரவ அதிதிகளாக கிழக்கு மேலதிக மாகாண கல்வி பணிப்பாளர் எஸ்.புவனேந்திரன்,காரைதீவு பிரதேச செயலாளர் சிவ.ஜெகராஜன், கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரீ.ஜே.அதியசயராஜ் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

முதல் பிரதியை பிரதம பொறியியலாளர் பி.இராஜமோகன் பெற்றுக் கொண்டார்.

அங்கு பாராளுமன்ற உறுப்பினர் கலையரசன் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையில் தமிழ் மக்கள் பாரிய யுத்தத்தை எதிர்கொண்டு சின்னாபின்னமாக போயிருக்கின்றார்கள். அவர்கள் பீனிக்ஸ் பறவை போல் மீண்டெழுவதற்கு இலக்கியம் வழி சமைக்க வேண்டும்.

# சம்மாந்துறையில் பாறூக்கின் கவிதை நூல் வெளியீட்டுவிழா



காரைதீவு, மே 23

கவிஞர் எச்.எம். பாறூக் எழுதி தாயதி வெளியீடாக வெளிவந்த "காணாமல்போன சில ஆண்டுகள்" நூல் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை சம்மாந்துறை அல்மர்ஜான் மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

தென்கிழக்கு பல்கலைக்கழக தமிழ்மொழித்துறை பேராசிரியர் றமீஸ் அப்துல்லா கவிஞர் மன்சூர் ஏ காதிர் உள்ளிட்ட பிரமுகர்கள் நயவுரை நிகழ்த்தினர்.

தாயதி நிறுவுனர் தில்லை அம்மா சார்பில் எச். எம். பாறூக் கிடமிருந்து காரையன் கதன் பஷ்றி ஆகியோர் முதல் பிரதியை பெற்றுக்கொண்டனர்.

சம்மாந்துறை முஸ்லிம் மத்திய கல்லூரி முன்னாள் அதிபர் கவிஞர் எழுத்தாளர் எச்.எம். பாறூக் எழுதிய "காணாமல் போன சில ஆண்டுகள்" கவிதைத் தொகுப்பு நூல் வெளியீடு விழாவில் இலக்கிய வாதிகள் அபிமானிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(அ)

# கிழக்கு கல்வி அபிவிருத்தியில் ஆளுநர் பங்களிப்பு செய்வார்

கல்முனை அதிபர் சங்கம் நம்பிக்கை

நிந்தவூர், மே 23

கிழக்கு மாகாண கல்வி அபிவிருத்தியில் புதிய ஆளுநர் செந்தில் தொண்டமானின் பங்களிப்பு அளப்பரியதாக இருக்கும் என கல்முனை கல்வி வலய அதிபர் சங்கம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

புதிய ஆளுநருக்கு வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்து, சங்கத்தின் சார்பில் தலைவர் இஸ்ட்.அஹமட், செயலாளர் ஏ.ஜி.எம்.றிசாத் ஆகியோர் இணைந்து வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

கடந்த காலங்களில் இந்திய வம்சாவளிய மக்களின் பாதுகாப்புக் கவசமாக இருந்து செயல்பட்ட சௌவமியமூர்த்தி தொண்டமானின் வழித்தோன்றலில் வந்த செந்தில் தொண்டமான் கிழக்கு மாகாணத்துக்கு புதிய ஆளுநராக நியமிக்கப்பட்டமையானது கிழக்கு மாகாண மக்களுக்குக் கிடைத்த பெரும் பேறாகும்.

இதன் ஊடாக கிழக்கு மாகாணம் பாரிய அபிவிருத்திகளை சந்திக்க வாய்ப்புகள் உள்ளது. இவ்வாறான இளம் தலைவர்கள் எமது பிராந்தியத்தின் அபிவிருத்திக்கு மட்டுமல்லாமல் மக்களின் உரிமைகளையும் வென்றெடுப்பதிலும் பாரிய பங்களிப்பை செய்வார்கள்.

குறிப்பாக கிழக்கு மாகாணத்தின் கல்வி அபிவிருத்தியில் செந்தில் தொண்டமானின் பங்களிப்பு அளப்பரியதான அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன் ஊடாக பாடசாலைக் கல்வியானது உயர்வான இடத்திற்கு செல்லக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன.

இந்நியமனத்தை வழங்கிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு கல்முனை வலய அதிபர் சங்கம் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது- என்று அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(அ-06)

# சமுர்த்தி சிறுவர் கலாசார போட்டி



மட்டக்களப்பு, மே 23

மட்டக்களப்பு காத்தான்குடி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள புதிய காத்தான்குடி சமுர்த்தி வங்கி வலயத்தின் ஏற்பாட்டில் 2023ஆம் ஆண்டுக்கான சமுர்த்தி சிறுவர் செக்குளு கலாசாரப் போட்டிகள் கடந்த சனிக்கிழமை காத்தான்குடி அல் அமீன் வித்தியாலய தேசிய பாடசாலயில் நடைபெற்றது.

காத்தான்குடி பிரதேச செயலாளர் உதய சிறீதரின் வழிகாட்டலில் புதிய காத்தான்குடி சமுர்த்தி வங்கி வலய முகாமையாளர் எஸ்.எச்.முசம்மில் தலைமையில் நடைபெற்ற இந்த போட்டி நிகழ்வில் 3 பிரிவுகளாக பேச்சு, கட்டுரை, நாட்டார் பாடல், நாடகம், அறிவிப்பு, சித்திரம் போன்ற போட்டிகள் இடம்பெற்றன.

(அ)

# முனைக்காடு விவேகானந்த ம.வியின் நூற்றாண்டையொட்டி குருதிக்கொடை

மட்டக்களப்பு, மே 23

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திற்குட்பட்ட முனைக்காடு விவேகானந்த மகா வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழாவினை சிறப்பித்து பாடசாலை மண்டபத்தில் இரத்ததானம் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது 50பேர் குருதியை கொடையாக வழங்கினர். மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை இரத்த வங்கியினர் இதனைப் பெற்றுக்கொண்டனர்.

குறித்த பாடசாலையின் நூற்றாண்டை சிறப்பித்து பல்வேறு



நிகழ்ச்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதன் ஓர் அங்கமாக அண்மையில் வலயமட்டத்திலான ஆக்கத்திறன் நிகழ்ச்சிகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# உலக நாடுகளுக்கு சீனா பெரும் சவாலாகியுள்ளது

## ரிஷி சுனக் சுட்டிக்காட்டு

லண்டன், மே 23

**சீனா, உலக நாடுகளின் பாதுகாப்பு மற்றும் செழுமைக்கு மிகப்பெரிய சவாலாக இருப்பதாக பிரித்தானிய பிரதமர் ரிஷி சுனக் தெரிவித்தார்.**



அத்துடன், "சீனா உள்நாட்டில் அதிக அளவில் சர்வாதிகாரமாக இருப்பதுடன், வெளிநாட்டில் உறுதியாக இருக்கிறார்கள்," என்று அவர் கூறினார்.

சீனா முன்வைக்கும் சவால்களைக் குறைக்க பிரித்தானியாவும் ஏனைய ஜி-7 நாடுகளும் பொதுவான அணுகுமுறையைப் பின்பற்றும் என்று சுனக் வலியுறுத்தியுள்ளார்.

"ஜி-7 உடன், பொருளாதார வற்புறுத்தலைப் பயன்படுத்தி சீனா ஏனைய நாடுகளின் இறையாண்மை விவகாரங்களில் தலையிடுவதைத் தடுக்க நடவடிக்கை எடுத்து வருகிறோம்," என்று அவர் கூறினார்.

பிரித்தானியாவின் முன்னாள் பிரதமர் லிஸ் ட்ரஸ் கடந்த வாரம் தாய்வானுக்குச் சென்றிருந்த நிலையில், மேற்கு நாடுகள் சீனாவை அமைதிப்படுத்தவும் இடமளிக்கவும் கூடாது என்று கூறினார்.

இந்த விஜயத்தின் மூலம் 1990 களில் மார்கரெட் தட்சருக்குப் பிறகு தாய்வானுக்குச் சென்ற பிரித்தானிய அரசியல்வாதி என்ற பெயரை லிஸ் ட்ரஸ் பெற்றுக்கொண்டார்.

சீனா, சுயராச்சிய நாடான தாய்வானை தனக்குச் சொந்தமானது கூறிக்கொண்டு உறுதியுடன் இருப்பதால் உலக நாடுகளின் மத்தியில் பதற்றங்கள் அதிகரித்துள்ளன.

இந்நிலையில், தாய்வானை தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்கு பலத்தை பயன்படுத்துவதைச் சீனா கைவிடவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

(அ)

# சவூதியின் முதல் விண்வெளியாளர் விண்வெளி நிலையத்துக்கு பயணம்!



ரியாத், மே 23

முதலாவது சவூதி அரேபிய விண்வெளியாளரை ஏற்றிச் சென்ற தனியார் விண்கலமொன்று சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு புறப்பட்டுள்ளது.

சவூதி அரேபியாவைச் சேர்ந்த மார்பக புற்றுநோய் ஆராய்ச்சியாளரான ரய்யனா பர்னாவி நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை தனது சகாவான சவூதி அரேபியாவின் விமானப்படை விமானி அலி அல்-கர்னியுடன் இந்த பயணத்தில் இணைந்தார்.

இந்த ஜோடி விண்வெளிக்கு பயணம் செய்த முதல் சவூதி விண்வெளி வீரர்கள் என்ற பெருமையை பெற்றுள்ளனர்.

அவர்கள் எலான் மஸ்க்கின் ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனத்தின் போல்கன் 9 என்ற விண்கலத்தில் தெற்கு அமெரிக்காவின் கேப் கனாவரலில் உள்ள கென்னடி விண்வெளி மையத்திலிருந்து உள்ளூர் நேரப்படி மாலை 5:37 மணிக்கு புறப்பட்டனர்.

இந்த குழுவில் முன்னாள் நாசா விண்வெளியாளர் பெக்கி விட்சன் மற்றும் விமானியாக பணியாற்றும் டென்னசியைச் சேர்ந்த தொழிலதிபர் ஜோன் ஷோப்னர் ஆகியோரும் உள்ளனர்.

நால்வரும் நேற்று சர்வதேச விண்வெளி நிலையத்தை அடைவார்கள் என எதிர்பார்க்கப்பட்டது.

சர்வதேச விண்வெளி நிலையத்தில் சுமார் ஒரு வாரத்தை செலவிட்ட பின்னர் அவர்கள், தெற்கு அமெரிக்க மாநிலமான புளோரிடாவின் கடற்கரையில் தரையிரங்கவுள்ளதாக ஸ்பேஸ் எக்ஸ் தெரிவித்துள்ளது.

(அ)

# அமெரிக்காவுடனான ஒப்பந்தத்தில் பாப்புவா நியூகினியா கையொப்பம்

நியூயோர்க், மே 23

பாப்புவா நியூகினியா தீவு அமெரிக்காவுடனான பாதுகாப்பு ஒப்பந்ததில் கையெழுத்திட்டுள்ளது.

குறித்த பாதுகாப்பு ஒப்பந்தத்தின் மூலம் இரு தரப்பினது நட்புறவை மேலும் வலுப்படுத்துவதோடு பாதுகாப்பு படைத்திறனை மேம்படுத்துதல் மற்றும் பாதுகாப்பு என்பன உறுதி செய்யப்படும் என அமெரிக்கா வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் பாப்புவா நியூகினியா பிரதமர் ஜேம்ஸ் மாரப்பே மற்றும் அமெரிக்கா வெளியுறவு அமைச்சின் உயரதி



காரிகள் முன்னிலையில் குறித்த ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளதாக அந்த நாட்டு ஊடகங்கள் உறுதிப்படுத்திப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# கிரேக்க பாராளுமன்றத் தேர்தலில் ஜனநாயகக் கட்சி அமோக வெற்றி!

எத்ரன்ஸ், மே 23

கிரேக்கத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற பாராளுமன்றத் தேர்தலில் புதிய ஜனநாயகக் கட்சி அமோக வெற்றியைப் பெற்றுள்ளது.

பெரும்பாலான வாக்குகள் எண்ணப்பட்ட நிலையில், 2015 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை ஆட்சி செய்த இடதுசாரி கட்சியை தோற்கடித்து, பழமைவாத புதிய ஜனநாயக கட்சி 40.8 சதவீத வாக்குகளைப் பெற்று முன்னிலையில் உள்ளது.

கிரேக்கத்தின் உள்நாட்டலுவல்கள் அமைச்சு, புதிய ஜனநாயக கட்சி பாராளுமன்றில் 145 ஆசனங்களை கைப்பற்றும் என்று முன்னதாக கணித்திருந்தது.

எனினும் புதிய ஜனநாயக கட்சி குறித்த அறுதிப்பெரும்பான்மையை பெற 6 ஆசனங்கள் குறைவாக உள்ளதாக தெரி



வித்திருந்தது.

இந்தநிலையில், நேற்று முன் தினம் முதல், புதிய ஜனநாயக கட்சி, சிரிசா கட்சி மற்றும் சோசலிச பாசோக் ஆகிய 3 கட்சிகளும் கூட்டணி அரசாங்கத்தை அமைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எனினும், குறித்த கட்சிகள் இணைந்து கூட்டணி அமைக்க முடியாத பட்சத்தில், ஒரு மாதத்துக்கு பின்னர் புதிய தேர்தல் நடத்தப்படும் என கிரேக்கத்தின் ஜனாதிபதி கத்தரினா சகெல்லரொபோயுலொயு தெரிவித்தார்.

அவ்வாறு மூன்று நாட்களுக்குள் கூட்டணி அரசாங்கம் அமைக்கப்படாத நிலையில், காபந்து அரசாங்கமொன்று அமைக்கப்படும் என கிரேக்க ஜனாதிபதி மேலும் கூறினார்.

(அ)

# மெக்சிக்கோவில் துப்பாக்கிச் சூடு 10 கார் பந்தய வீரர்கள் உயிரிழப்பு



மெக்சிக்கோ சிற்றி. மே 23

மெக்சிக்கோ நாட்டின் பஜா கலிபோர்னியா மாகாணம் என்செண்டா நகரில் உள்ள சென்வென்சிட்டி பகுதியில் கார் பந்தயம் இடம்பெற்றுள்ளது.

குறித்த கார் பந்தயத்தில் 50 இற்கு மேற்பட்ட கார் பந்தய வீரர்கள் பங்குபற்றியுள்ளனர். இப்போட்டியை காண நூற்றுக்கணக்கானோர் குவிந்திருந்தனர்.

இந்நிலையில், கார் பந்தயத்தின்போது திடீரென துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது.

வானில் வந்த ஒரு கும்பல் கார் பந்தய வீரர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளது.

இந்த துப்பாக்கிச் சூட்டில் கார் பந்தய வீரர்கள் 10 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும், 9 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இது குறித்த மேலதிக விசாரணைகளை பொலிஸார் தீவிரமான மேற்கொண்டுள்ளனர்.

# உதைபந்தாட்ட மைதானத்தில் நெரிசலில் சிக்கி 12 பேர் பலி!

சான் சால்வடோர், மே 23

மத்திய அமெரிக்க நாடுகளில் ஒன்றான எல் சால்வடோரின் தலைநகர் சான் சால்வடோரில் கஸ்கட்லான் கால்பந்தாட்ட மைதானம் உள்ளது.

இங்கு தற்போது சால்வடோர் லீக் கால்பந்தாட்ட போட்டி இடம்பெற்று வருகின்றது.

இதன் காலிறுதி போட்டி அலியான்சா மற்றும் எப்.ஏ.எஸ். என்ற இரு அணிகளுக்கு இடையே நடைபெற்றது.

இந்த போட்டி தொடங்கி விறுவிறுப்பாக நடந்து கொண்டிருந்தது. இந்த போட்டியை வெளியில் இருந்தும் மரங்கள், உயரமான கட்டடங்களில் ஏறியும் ஏராளமான ரசிகர்கள் பார்த்துக் கொண்டிருந்தனர்.

திடீரென வெளியில் நின்ற ரசிகர்கள் மைதானத்தின் நுழைவாயில் கேட்டை உடைத்துக் கொண்டு அத்துமீறி உள்ளே நுழைந்துள்ளனர்.

இதனால் அங்கு பதற்றம் நிலவியதையடுத்து 16 நிமிடங்களில் போட்டி இடை நிறுத்தப்பட்டது.

ஆயிரக்கணக்கான ரசிகர்கள் மைதானத்துக்குள் நுழைய முயன்றதால் அங்கு கடுமையான கூட்ட



நெரிசல் ஏற்பட்டுள்ளது.

எனவே கூட்ட நெரிசலில் சிக்கி 12 பேர் சம்பவ இடத்திலேயே மூச்சுத்திணறி உயிரிழந்துள்ளனர். சிறுவர்கள் உட்பட 100 இற்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்துள்ளனர்.

(அ)

# குஜராத்திடம் வீழ்ந்தது பெங்களூர் 'பிளே ஓவ்' சுற்று வாய்ப்பும் போனது!




பெங்களூர், மே 23

நடப்பு ஐ. பி. எல். தொடரின் கடைசி லீக் போட்டியில் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணியை வீழ்த்தியுள்ளது குஜராத் ரைட்டன்ஸ். இந்த தோல்வியின் மூலம் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணி முதல் சுற்றோடு வெளியேறியுள்ளது. இதனால், மும்பை இந்தியன்ஸ் இறுதிக்கு முந்தைய சுற்றுக்கு நான்காவது அணியாக நுழைந்துள்ளது.

இந்தப் போட்டியில் 198 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை குஜராத் அணி விரட்டியது. சஹா மற்றும் ஷுப்மன் கில் இன்னிங்ஸை தொடங்கினர். சஹா 12 ஓட்டங்களில் வெளியேறினார். தொடர்ந்து வந்த விஜய் சங்கர், கில் உடன் 123 ஓட்டங்களுக்கு இணைப்பாட்டம் அமைத்தார்.

இன்னிங்ஸை நிதானமாக தொடங்கிய விஜய் சங்கர், அப்படியே வேகம் கூட்டினார். 35 பந்துகளில் 53 ஓட்டங்கள் எடுத்து அவர் விக்கெட்டை இழந்தார். 7 பௌண்ட்ரிகள் மற்றும் 2 சிக்ஸர்கள் அவரின் இன்னிங்ஸில் அடங்கும். சானக மற்றும் டேவிட் மில்லர் ஆகியோர் ஒற்றை இலக்க ஓட்டங்களில் வெளியேறினர்.

இறுதிவரை விக்கெட்டை இழக்காமல் இருந்த ஷுப்மன் கில், 52 பந்துகளில் 104 ஓட்டங்கள் எடுத்தார். 5 பௌண்ட்ரிகள் மற்றும் 8 சிக்ஸர்கள் அவரின் ஆட்டத்தில் அடங்கும். 19.1 ஓவர்கள் முடிவில் 4 விக்கெட்கள் இழப்புக்கு 198 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது குஜராத்.

முன்னதாக, துடுப்பெடுத்தாடிய பெங்களூர் அணிக்கு தொடக்கம் கொடுத்த அணித் தலைவர் டூ பிளசிஸ், விராட் கோலி இன்னிங்ஸை தொடங்கினர். இருவரும் 67 ஓட்டங்களுக்கு இணைப்பாட்டம் அமைத்தனர். டூ பிளசிஸ் 28 ஓட்டங்களில் விக்கெட்டை இழந்தார்.

அடுத்து வந்த மக்ஸ்வெல் மற்றும் லோம்ரோர் அடுத்தடுத்த ஓவர்களில் விக்கெட்டை இழந்தனர். பின்னர் வந்த பிரேஸ்வெல்லுடன் 47 ஓட்டங்களுக்கு இணைப்பாட்டம் அமைத்தார் கோலி.

பிரேஸ்வெல் 26 ஓட்டங்களில் வெளியேறினார். அடுத்து வந்த தினேஷ் கார்த்திக் ஓட்டம் எதுவும் எடுக்காமல் முதல் பந்திலேயே வெளியேறினார். மறுமுனையில் நிலைத்து நின்று விளையாடிய விராட் கோலி, 60 பந்துகளில் சதம் கடந்தார்.

20 ஓவர்கள் முடிவில் பெங்களூர் 5 விக்கெட்கள் இழப்புக்கு 197 ஓட்டங்கள் எடுத்தது.

இந்தப் போட்டியில் இரு அணிகளுக்கும் இடையிலான வித்தியாசம் என்னவென்றால் அது சிக்ஸர்கள் ரான். பெங்களூர் அணி தனது இன்னிங்ஸில் மொத்தமாக 3 சிக்ஸர்களை விளாசி இருந்தது. குஜராத் அணி 10 சிக்ஸர்களை பதிவு செய்தது.




# ஹைதராபாத்தை வீழ்த்தி 'பிளே ஓவ்' சுற்றில் மும்பை!

மும்பை, மே 23

சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணிக்கு எதிரான லீக் ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் அணி 8 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

நேற்று முன்தினம் நடந்த இந்தப் போட்டி மும்பைக்கு வெற்றி மிகுந்த நெருக்கடியாக இருந்தது. இறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறும் வாய்ப்பு இல்லை என்பதால், அதேநேரத்தில் மும்பை அணி இந்த ஆட்டத்தில் அதிக ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று நிகர ஓட்ட விகிதத்தை உயர்த்திக் கொள்ள வேண்டும் என்ற அழுத்தத்துடன் களமிறங்கியது.

முதலில் விளையாடிய ஹைதராபாத் அணி 20 ஓவர்களில் 5 விக்கெட் இழப்புக்கு 200 ஓட்டங்கள் குவித்தது. தொடக்க ஆட்டக்காரராக களமிறங்கிய அறிமுக வீரர் விவ்ராந்த் சர்மா 47 பந்துகளில் 2 சிக்ஸர், 9 பௌண்ட்ரிகளுடன் 69 ஓட்டங்கள் குவித்து ஆட்டமிழந்தார். மற்றொரு தொடக்க ஆட்டக்காரர் மயங்க் அகர்வால் 46 பந்துகளில் 83 ஓட்டங்களை விளாசினார்.

பின்னர் வந்த ஹென்ரிச் கிளாசன் 19, கிளென் பிலிப்ஸ் 1, ஹாரி புரூக் 0 என நடையைக் கட்டினர். அணித் தலைவர் அய்டன் மார்க்ரம் 13 ஓட்டங்களும், சன்வீர் சிங் 4 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தனர். மும்பை அணி தரப்பில் ஆகாஷ் மத்வால் 4 விக்கெட்களைக் கைப்பற்றினார்.

பின்னர் 201 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் மும்பை அணி விளையாடியது.

11.4 ஓவர்களில் வெற்றி இலக்கை எட்டினால், றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூார் அணியை விட கூடுதலான நிகர ரன் விகிதத்தை மும்பை அணி பெற முடியும் என்ற நிலை இருந்தது. ஆனால், நிகர ஓட்ட விகிதம் குறித்து கவலைப்படாமல் மும்பை அணி வீரர்கள் விளையாடினர்.

தொடக்க வீரராகக் களமிறங்கிய இஷான் கிஷன் 14 ஓட்டங்களில் புவனேஸ்வர் பந்தில் வீழ்ந்தார். அரைச சதமடித்த நிலையில் ரோஹித் ஆட்டமிழந்தார். 37 பந்துகளில் 56 ஓட்டங்களை (8 பௌண்ட்ரி, ஒரு சிக்ஸர்) அவர் எடுத்திருந்தார். பின்னர் 3ஆவது விக்கெட்டுக்கு கிறீனுடன் இணைந்த சூர்யகுமார் யாதவ் சிறப்பாக விளையாடினார்.

மறுமுனையில் சிக்ஸர், பௌண்ட்ரிகளை பறக்க விட்ட கிறீன் ஐ. பி. எல். போட்டியில் தனது முதலாவது சதத்தை எட்டினார். 18 ஓவர்களில் அந்த அணி 2 விக்கெட் இழப்புக்கு 201 ஓட்டங்கள் எடுத்து 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி கண்டது.

கிரீன் 100 ஓட்டங்களும் (47 பந்துகள், 8 சிக்ஸர்கள், 8 பௌண்ட்ரிகள்), சூர்யகுமார் யாதவ் 25 ஓட்டங்களும் (16 பந்துகள்) எடுத்து ஆட்டமிழக்கால் இருந்தனர்.

இந்த வெற்றியின் மூலம் மும்பை அணி 16 புள்ளிகளை பெற்றது. அடுத்து நடந்த போட்டியில் பெங்களூர் தோல்வியடைந்ததால் மும்பை இறுதிக்கு முந்தைய சுற்றுக்கு தகுதி பெற்றது. (ஐ)

# பிரெஞ்சு ரென்னிஸ் விலகினார் நடால்!

மட்ரிட், மே 23

கிராண்ட்ஸலாம் அந்தஸ்து பெற்ற பிரெஞ்சு பகிரங்க ரென்னிஸ் தொடரில் நடப்பு சம்பியனான ரபேல் நடால் விலகியுள்ளார். அத்துடன், அடுத்த ஆண்டு ரென்னிஸ் தொடரிலிருந்து ஓய்வுபெற எதிர்பார்த்துள்ளதாகவும் கூறியுள்ளார்.

காயம் காரணமாகவே அவர் இந்தத் தொடரிலிருந்து வெளியேறினார். அத்துடன், அடுத்த ஆண்டு சர்வதேச ரென்னிஸ் தொடரிலிருந்து ஓய்வுபெற எதிர்பார்த்துள்ளதாகவும் நடால் கூறியுள்ளார்.

36 வயதான ரபேல் நடால் ஸ்பெயினை சேர்ந்தவர். பிரெஞ்சு பகிரங்க ரென்னிஸ் தொடரை 14 தடவைகள் கைப்பற்றிய அவர், 22 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்ற வீரர் என்ற பெருமையையும் தன்வசம் வைத்துள்ளார். இந்த சாதனையை அவர் சேர்பியாவின் ஜொகோவிச்சுடன் இணைந்து பகிர்ந்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)





# ஐ. பி. எல். அறிமுக போட்டி விவ்ராந்த் சர்மா சாதனை

மும்பை, மே 23

ஐ. பி. எல். அறிமுக போட்டியில் 69 ஓட்டங்கள் குவித்து 15 ஆண்டு சாதனையை சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணி வீரர் விவ்ராந்த் சர்மா முறியடித்துள்ளார்.

இதன் மூலம் ஐ. பி. எல். அறிமுக போட்டியில் அதிக ஓட்டங்கள் குவித்த வீரர்கள் வரிசையில் முதலிடத்துக்கு வந்தார் விவ்ராந்த்.

முன்னதாக ராஜஸ்தான் றோயல்ஸ் அணி வீரர் ஸ்வப்னில் அஸ்நோட்கர் 2008ஆம் ஆண்டில் அறிமுகமானபோது 60 ஓட்டங்கள் குவித்திருந்ததே அதிகபட்ச ஓட்டங்களாக இருந்தது. (ஐ)

# கெயிலின் சாதனையை முறியடித்தார் கோலி!

பெங்களூர், மே 23

ஐ. பி. எல். கிரிக்கெட்டில் அதிக சதம் அடித்த வீரர் என்ற சாதனையை படைத்துள்ளார் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரின் வீரர் விராட் கோலி.

நடப்பு தொடரில் குஜராத் அணிக்கு எதிரான போட்டியில் பதிவு செய்த சதத்துடன் சேர்த்து மொத்தமாக 7 சதங்களை பதிவு செய்துள்ளார் கோலி. இதன் மூலம் கிறிஸ் கெயிலின் 'சத' சாதனையை கோலி தகர்த்துள்ளார்.

ஐபிஎல் கிரிக்கெட்டில் கெயில் மொத்தம் 6 சதங்களை பதிவு செய் துள்ளார் என்பது குறிப் பிடத்தக்கது.

இதேநேரம், ஐ. பி. எல். கிரிக்கெட்டில் ஒட்டுமொத்தமாக கடந்த 2008 தொடர் முதல் நடப்பு தொடர் வரையில் 7,263 ஓட்டங்கள் குவித்துள்ளார் கோலி. இதன் மூலம் அதிக ஓட்டங்கள் எடுத்த துடுப்பாட்ட வீரராகவும் அவர் உள்ளார்.

மொத்தம் 643 பௌண்ட்ரிகளை விளாசி அதிக பௌண்ட்ரிகள் அடித்த வீரர்கள் வரிசையில் 3ஆவது இடத்தில் உள்ளார். 234 சிக்ஸர்கள் விளாசி அதிக சிக்ஸர்கள் பதிவு செய்த வீரர்களில் 5ஆவது இடத்தில் உள்ளார். 50 அரைச்சதங்கள் மற்றும் 7 சதங்களை கோலி இதுவரை ஐ. பி. எல். கிரிக்கெட்டில் பதிவு செய்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)



# புலம்பெயர் தமிழர்கள் முதலீடு செய்ய வாய்ப்பு

## அழைக்கிறார் ஜனாதிபதி ரணில்

கொழும்பு, மே 23

**போரினால் ஏற்பட்ட அச்ச நிலை காரணமாக இடம்பெயர்ந்து பன்னாடுகளிலும் வாழும் புலம்பெயர் தமிழர்கள் இலங்கையில் வர்த்தகங்களை முன்னெடுக்கவும், முதலீடுகளை மேற்கொள்ளவும் வாய்ப்புகள் உள்ளதாக தெரிவித்துள்ள ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, அதற்கு தேவையான ஒழுங்குகளை செய்யுமாறும் ஆலோசனைகளை வழங்கியுள்ளார்.**

ஐக்கிய தேசிய கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுடனான சந்திப்பின்போதே இந்த விடயத்தை ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இதன்போது ஜனாதிபதியிடம் கருத்துரைத்த ஐ.தே.கவின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார, புலம்பெயர் தமிழர்கள் பலர் இலங்கையில் அபிவிருத்தி பணிகளுக்கு ஒத்துழைக்க விரும்புகின்றனர். எம்முடன் தொடர்புகொண்டு கலந்துரையாடினர்.

குறிப்பாக, ஜனாதிபதியின் அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்க புலம்பெயர் தமிழர்கள் ஆர்வமாக உள்ளனர். உண்மையில், அவர்கள், நெருக்கடியான இந்த நிலையில் இலங்கைக்கு உதவுவதற்கு தயாராகவே உள்ளனர். சம்பிரதாயபூர்வமான தமிழ் அரசியல்



கட்சிகள் மீது புலம்பெயர் தமிழர்களுக்கு தற்போது நம்பிக்கை இல்லை. அவர்கள் அதனை விரும்பவும் இல்லை.

இலங்கையில் வாழும் தமிழர்களின் வாழ்வியலில் வளமான மாற்றத்தையே புலம்பெயர் தமிழர்கள் விரும்புகின்றனர். வடக்கு, கிழக்கில் உள்ள இளையோரும் அதனையே கோருகின்றனர்.

எதிர்வரும் 27 மற்றும் 28ஆம் திகதிகளில் வடக்குக்கு மீண்டும் செல்லவுள்ளேன். எனவே, இந்த நேரத்தில் அனைவரையும் ஒன்றிணைத்து பயணிப்பது சிறந்தது என்று நீண்ட விளக்கத்தை அளித்தார்.

(அ)

# உருத்திரபுரம் நில அளவை பணிகள் நிறுத்தப்பட்டன!

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

யாழ்ப்பாணம், மே 23

உருத்திரபுரம் சிவன் ஆலயத்தில் தொல்பொருள் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்படவிருந்த நில அளவைப் பணிகள் நிறுத்தப்பட்டுள்ளன என்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

உருத்திரபுரம் உருத்திரபுரீஸ்வரர் ஆலய வளாகத்தில் தொல்பொருள் திணைக்களத்தினரால் மேற்கொள்ளப்படவிருந்த நில அளவைகள் தாம் முன்னெடுத்த நடவடிக்கைகள் காரணமாகவே நிறுத்தப்பட்டன என்றும் அவர் கூறியுள்ளார்.

திட்டமிடப்பட்ட நில அளவைப் பிரச்னை தொடர்பாக



ஆலய நிர்வாகத்தினர் முறையிட்டிருந்த நிலையில், அதனை ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு சென்றதன் விளைவாக நில அளவைப் பணிகள் நிறுத்தப்பட்டன என்று அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

# கல்வியாளர் சேவை அலுவலர்கள் இன்று சுகவீன லீவுப் போராட்டம்

கொழும்பு, மே 23

நாடு முழுவதிலும் உள்ள தேசிய கல்வியியல் கல்லூரிகள் ஆசிரிய கலாசாலைகள் மற்றும் ஆசிரிய மத்திய நிலையங்களில் பணியாற்றும் இலங்கை ஆசிரிய கல்வியாளர் சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் இன்று செவ்வாய்க்கிழமை சுகவீன லீவுப் போராட்டத்தில் ஈடுபடுகின்றனர் என இலங்கை ஆசிரிய கல்வியாளர் சேவைத் தொழிற்சங்கத்தின் செயலாளர் தம்மிக மீரிகான தெரிவித்தார்.

ஆசிரிய கல்விக்கான சுயாதீனப் பல்கலைக்கழகம் ஒன்றை உருவாக்கும் செயற்பாடுகள் பல்வேறு அழுத்தங்களால் மந்தகதியில் இடம்பெறுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் ஆசிரிய கல்வியாளர் சேவை உத்தியோத்தர்கள் எதிர்கொள்ளும் சம்பள முரண்பாடுகளைத் தீர்த்து வைக்குமாறு கோரியும், நிறைவேற்றுத்தரச் சேவை எனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஆசிரிய கல்வியாளர் சேவைக்கான வரப்பிரசாதங்கள் வெறும் வாய்ப்பேச்சளவிலேயே இடம்பெறுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் - ஏனைய நிறைவேற்றுத்தரச் சேவை உத்தியோகத்தர்கள் அனுபவிக்கும் வரப்பிரசாதங்களை கல்வியாளர் சேவை உத்தியோகத்தர்களுக்கும் பெற்றுக்கொடுக்கவும் - குறிப்பாக தரம் மூன்றில் நியமனம் பெற்ற உத்தியோகத்தர் ஒருவர் பன்னிரண்டு ஆண்டுகளில் தரம் ஒன்றுக்குப் பதவி உயர்வு பெறுவதற்கு வழிவகுக்குமாறு கோரியும் ஒருநாள் சுகவீனலீவுப் போராட்டம் முன்னெடுக்கப்படுவதாக செயலாளர் தம்மிக தெரிவித்தார்.

இந்தக் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாத பட்சத்தில் தேசிய கல்வியியல் கல்லூரிகளுக்கு மாணவர்களை உள்வாங்கும் நடவடிக்கைகளில் இருந்து தாம் விலகியிருக்கப்போவதாகவும் இவை குறித்துக் கல்வி அமைச்சுச் செயலாளருக்கு அறிவித்துள்ளதாகவும் தம்மிக குறிப்பிட்டார்.

(அ)

# மாணவி கடத்தல் ஐந்து பேர் கைது

கொழும்பு, மே 23

சிலாபம் பிரதேசத்தில் 18 வயதுடைய பாடசாலை மாணவி கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தம்புள்ளை விசேட பணியக அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் மாத்தளை குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

21 மற்றும் 40 வயதுடைய சந்தேகநபர்கள் மேலதிக விசாரணைகளுக்காக ஹலவத்த தலைமையக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் சிலாபம் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# பாக்குத்தெண்டலுடன் ஆரம்பமானது வற்றாப்பளை அம்மனின் பொங்கல்!







முல்லைத்தீவு, மே 23

வரலாற்றுச் சிறப்புமிக்க முல்லைத்தீவு வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவத்தின் ஆரம்ப உட்சவமான பாக்குத் தெண்டல் உற்சவம் நேற்று அதிகாலை சிறப்பாக இடம்பெற்றது.

நேற்று அதிகாலை 1.45 மணியளவில் முள்ளியவளை காட்டாவிநாயகர் ஆலயத்தில் மடை பரவி வழிபாடுகள் இடம்பெற்றதைத் தொடர்ந்து ஆலயத்துடன் பாரம்பரியமாக தொடர்புடைய குடும்பங்களிடம் சென்று இந்த பாக்குத் தெண்டல் உற்சவம் இடம்பெற்றது.

பாக்குத் தெண்டலுக்குச் சென்றவர்கள் ஆலயத்தை வந்தடைந்தும் ஆலயத்தில் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்றது.

பாரம்பரிய தெய்வமாகிய வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் உற்சவத்தை அறிவிக்கும் முகமாக ஆலயத்துடன் பாரம்பரியமாக தொடர்புகளை கொண்ட குடும்பங்களின் வீடுகளுக்குச் சென்று தெரிவிக்கும் சம்பிரதாய உற்சவமாக இது இடம்பெறுகின்றது.

இந்த உற்சவத்தை அடுத்து 7 ஆம் நாள் முல்லைத்தீவு பெருங்கடலில் தீர்த்தம் எடுத்து வந்து உப்பு நீரில் விளக்கேற்றி பொங்கல் உற்சவம் இடம்பெறும்.

வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவத்தின் தீத்தம் எடுக்கும் உட்சவம் எதிர்வரும் 29 ஆம் திகதி இடம்பெறவுள்ளதோடு காட்டாவிநாயகர் ஆலயப் பொங்கல் ஜூன் 4 ஆம் திகதியும், வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் ஜூன் 5ஆம் திகதியும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

## ஜானகவின்...

கட்சி, இலங்கை மேலவை கூட்டணி ஆகியன இந்தப் பிரேரணைக்கு எதிராக வாக்களிக்கவுள்ளன.

இதேசமயம், இலங்கை தமிழரசு கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முடிவு இன்று செவ்வாய்க்கிழமை வெளியாகும் என்று தெரிவிக்கப்பட்டது.

எனினும், தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களிக்க சிறீலங்கா பொதுஜன பெரமுன தீர்மானித்துள்ளது.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவரான ஜானக ரத்நாயக்கா, அரசாங்கத்தின் மின்சார கட்டண உயர்வுக்கு எதிராக கடும் எதிர்ப்பை வெளியிட்டதுடன், அது தொடர்பில் அரசாங்கத்தை கடுமையாக விமர்சித்தும் வருகிறார். இந்த நிலையில், அவரை பதவி நீக்கும் பிரேரணை நாளை புதன்கிழமை பாராளுமன்றில் வாக்கெடுப்புக்கு விடப்படவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சிறுவர்களுக்கு...

மாணவர்கள் அநாவசியமாக வெளியில் நிற்காமல் வீட்டுக்கு உடன் செல்ல பணிப்புரை வழங்க வேண்டும். அத்துடன், அடையாந்தெரியாதவர்கள் உண்பதற்கு ஏதாவது கொடுத்தால் வாங்க வேண்டாம்” என அறிவுறுத்தியுள்ளனர்.

“அடையாளந்தெரியாதோர் வாகனங்களில் ஏற்றிச் சென்று வீடுகளுக்கு விடுகின்றோம் என்றால் வாகனங்களில் ஏற வேண்டாம்“ எனவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

சந்தேகத்துக்கிடமாக யாராவது நடமாடினால் பொலிஸ் அவசர தொலைபேசி இலக்கமான 119 இற்கு அல்லது 065 222 4356, 065 222 4422 என்ற இலக்கத்துக்கு அறிவிக்குமாறு துண்டுபிரசுரத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஐ)

## அரசியல்...

உறுப்பினர் சு. நோகராதலிங்கம் (வினோ) தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்துக்கு நியமிக்கப்பட்ட புதிய ஆளுநர் பி. எஸ். எம். சார்ள்ஸ் நேற்று திங்கட்கிழமை கடமைகளை பொறுப்பேற்றார். இந்த நிகழ்வில் கலந்து கொண்ட பின்னரே செய்தியா ளர்களிடம் மேற்கண்டவாறு கருத்து ரைத்தார்.

அத்துடன், தற்போது வட மாகாண சபை இயங்காமலிருக்கின்றது. அரசமைப்பிலுள்ள 13ஆம் திருத்தச் சட்டத்தின் மூலம் கொண்டுவரப்பட்ட முறைமையின் கீழ் இந்த ஆளுநர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கையின் சட்ட திட்டங்களுக்கு ஏற்பவும் - அரசமைப்புக்கு ஏற்பவும் வடக்கு மாகாண சபையை ஏற்றுக் கொண்டு அதனூடாக மத்திய அரசாங்கத்திடம் இருந்து நிதியை பெற்று மாகாணத்தை அபிவிருத்தி செய்யவேண்டிய பெரும் பொறுப்பு ஆளுநருக்கு உள்ளது.

கடந்த காலங்களில் பல ஆளுநர்கள் பதவி வகித்தாலும் இரண்டாவது தடவையாக சார்ள்ஸ் பதவியேற்றுள்ளார். அவருக்கு எங்களுடைய அரசியல் கடந்து அபிவிருத்தி மற்றும் ஏனைய அத்தியாவசிய விடயங்களிலே ஒத்துழைப்பு வழங்குவதற்கு தயாராக உள்ளோம்.

அவரும் இலங்கை அரசமைப்பிலுள்ள மாகாண சபை முறைமையை ஏற்றுக்கொண்டு மாகாணத்துக்கு கூடுதலான அபிவிருத்தி வேலைத்திட்டங்களை மேற்கொள்ள வேண்டும். நிர்வாக அமைப்புகள் யாழ்ப்பாண மாவட்டத்துக்குள் முடக்கப்படக் கூடாது. வன்னி மாவட்டம் உட்பட அனைத்து இடங்களுக்கும் அபிவிருத்தி திட்டங்களை ஆளுநர் கொண்டு சென்று சேர்க்க வேண்டும் - என்றார். (ஐ)

## சீனாவுடன்...

பிரிவு தெரிவித்துள்ளது.

நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டதைத் தொடர்ந்து எரிபொருளுக்கு பெரும் தட்டுப்பாடு நீடித்தது. இதைத் தொடர்ந்து எரிபொருள் இறக்குமதி - விநியோகம் - விற்பனையை தனியார் மயப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது. ஏற்கனவே, நாட்டில் இந்திய நிறுவனம் எரிபொருள் விற்பனையில் ஈடுபட்டு வரும் நிலை யில், தற்போது சீனாவும் களமிறங்கியுள் ளது.

இதேசமயம், அமெரிக்கா, அவுஸ்திரேலிய நாடுகளின் நிறுவனங்களும் இலங்கையில் எரிபொருள் விற்பனையில் ஈடுபடுவதற்கான முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சட்டவிரோத...

தையிட்டியில் பொதுமக்களின் காணியை ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ள பௌத்த விகாரை எதிர்வரும் 26ஆம் திகதி திறந்து வைக்கப்படவுள்ளது. இந்த நிலையில், விகாரையை அகற்றக்கோரி நேற்று திங்கட்கிழமை மீண்டும் போராட்டம் ஆரம்பமானது. எதிர்வரும் 26ஆம் திகதி வரை போராட்டம் தொடரும் என்று தெரிவித்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நேற்றைய போராட்டத்திலேயே சுகாஷ் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், “நாங்கள் பௌத்த விகாரைகளுக்கு எதிராகப் போராடவில்லை. யாழ்ப்பாணம் நாக விகாரைக்கு எதிராகப் போராடவில்லை. எமது நிலங்களை அபகரித்து சட்டவிரோதமாக அமைக்கப்படும் விகாரைகளையே எதிர்க்கிறோம். எமது போராட்ட நியாயங்களை அஸ்கிரிய, மல்வத்து பீட மகாநாயக்கர்கள் புரிந்து கொண்டு, சட்டவிரோத கட்டுமானங்களுக்கு எதிராக எம்முடன் இணைந்து போராட முன்வர வேண்டும் - என்றார்.

தமிழரின் காணியை ஆக்கிரமித்து அமைக்கப்பட்ட தையிட்டி விகாரை அகற்றப்பட வேண்டும், ஆக்கிரமிக்கப் பட்டுள்ள காணிகளை விடுவிக்க வேண்டும் என்று கோரி கடந்த 3ஆம் திகதி முதல் 5ஆம் திகதி வரை தொடர்ச்சியாக போராட்டம் முன்னெடுக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மக்களின்...

வாழ்த்துவதற்கு வருகை தந்த மத குருமார் சில கோரிக்கைகளை முன் வைத்திருந் தார்கள். மக்கள் எதிர்நோக்கும் பிரச்னைகளை யதார்த்தமாக அணுகி அவற்றுக்கு தீர்வு பெற்று தருமாறு கூறியிருக்கின்றார்கள். எனவே, அந்த விடயத்தை நான் சரியான முறையில் அணுகி அதற்கு தீர்வுகளை பெற்று தருவதற்கு முயற்சிப்பேன்.

இந்த மாகாணத்தில் இருக்கின்ற அனைத்து மதங்களும் தங்களுடைய தனித்துவமான மத அனுஷ்டானங்களை மேற்கொள்வதற்கான உரிமைகளை வழங்க வேண்டும் என்பதில் அரசாங்கம் உறுதியாக இருக்கின்றது. அந்த வகையில், அதற்கான சகல ஏற்பாடு களையும் எடுக்க நான் முயற்சி செய்வேன்.

இதேபோல, அவைத் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம் மாகாண மக்கள் குறிப்பாக, யாழ். மாவட்ட மக்களின் குடிதண்ணீர் பிரச்னை சம்பந்தமாக எடுத்துக் கூறியிருந்தார்.

ஏற்கனவே, பாலி ஆறு சம்பந்தமான ஒரு பிரேரணையை தாங்கள் தயாரித்து வைத்திருப்பதாகவும் அதை முன்னெடுத்து செல்லும்படியும் கூறியிருக்கின்றார். அது சம்பந்தமாகவும் நான் உரிய நடவடிக்கை எடுப்பதற்கு தயாராக உள்ளேன். யாழ்ப்பாண மக்களுக்கு நீண்டகாலமாக இருக்கின்ற குடிதண்ணீர் பிரச்னையை நான் உணர்ந்திருக்கின்றேன். நான்கூட இங்கு வருகின்றபோது குடிதண்ணீர் பிரச்னையை தனிப்பட்ட ரீதியாக உணர்ந்திருக்கின்றேன். எனவே, இந்தப் பிரச்னையை தீர்ப்பதற்கு முக்கியமாகக் கவனம் எடுப்பேன் - என்றார்.

# பெரமுன உறுப்பினர்களின் அதிருப்தி நியாயமானதே!

### அந்த கட்சியின் பொது செயலர்



கொழும்பு, மே 23

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு அமைச்சு பதவி வழங்காத காரணத்தால் விரக்தியில் அவர்கள் அதிருப்தியடைந்து குறிப்பிடும் கருத்துகள் நியாயமானவை. இதனால் ஒருசில உறுப்பினர்கள் கட்சியுடன் தொடர்பில்லாமல் இருக்கிறார்கள். அரசியல் அதிகாரம் எம்மிடமே உள்ளது அதை வெகுவிரைவில் உறுதிப்படுத்துவோம் என்று அந்த கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் தலைமை பணிமனையில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது, 75 வருட கால அரசியல் நாட்டுக்கு என்ன செய்தது ? என இளம் தலைமுறையினர் கேள்வி எழுப்புகிறார்கள். கடந்த 75 வருட காலத்தில் தமிழீழ விடுதலை புலிகளுடனான யுத்தம், மக்கள் விடுதலை முன்னணியின் இனக் கலவரம் என்பன சமூக மற்றும் பொருளாதார கட்டமைப்பில் பெரும் தாக்கம் ஏற்படுத்தியதை தற்போதைய இளம் தலைமுறையினர் மறந்து விட்டார்கள்.

14ஆவது வருட யுத்த வெற்றியை கடந்த வாரம் கொண்டாடிய போது யுத்த வெற்றியை அவமதிக்கும் வகையில் ஒரு தரப்பினர் முறையற்ற வகையில் செயல்பட்டது கவலைக்குரியது. கொடிய பயங்கரவாத அமைப்பாக அடையாளப்படுத்தப்பட்ட விடுதலை புலிகளிடமிருந்து இலவசமாக விடுதலை கிடைக்கவில்லை. யுத்த வெற்றிக்காக பலர் உயிர் தியாகம் செய்துள்ளார்கள் என்பதை நாட்டு மக்கள் மறந்து விடக் கூடாது.

30 வருடகால யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து நாட்டின் தேசிய பாதுகாப்பு, இன நல்லிணக்கம் ஆகியவற்றை உறுதிப்படுத்திய பெருமை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்‌ஷவுக்கு உரித்தாக்கப்பட்டுள்ளது. யுத்த வெற்றியை அவரிடமிருந்து எவராலும் பறிக்க முடியாது. மக்களாணையுடன் தான் மகிந்த ராஜபக்‌ஷ ஒவ்வொரு முறையும் ஆட்சியமைத்துள்ளார். இராணுவ பலத்துடன் திருட்டுத்தனமாக அவர் பிரதமர் பதவியை ஏற்க போவதில்லை என்பதை உத்தியோகபூர்மாக அறிவித்துள்ளோம். மக்களாணையுடன்தான் அவர் மீண்டும் ஆட்சிக்கு வருவார்.

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களுக்கு இடையில் முரண்பாடு தோற்றம் பெற்றுள்ளது என குறிப்பிடுவது அடிப்படையற்றது. கட்சியின் பெரும்பாலான உறுப்பினர்கள் கட்சியுடன் இணக்கமாக செயற்படுகிறார்கள். ஒருசிலர் மாத்திரமே கட்சியுடன் தொடர்பற்ற நிலையில் உள்ளார்கள். அவர்கள் அரசாங்கத்துடன் நேரடியாக தொடர்பில் உள்ளார்கள்.

அமைச்சு பதவி தொடர்பில் ஜனாதிபதியுடன் இனி பேச்சில் ஈடுபடப் போவதில்லை என்பதை தெளிவாக அறிவித்துள்ளோம். பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தை தோற்றுவித்த சிரேஷ்ட உறுப்பினர்கள் அமைச்சு பதவி இல்லாத காரணத்தினால் அதிருப்தி அடைந்துள்ளார்கள். மாவட்ட அபிவிருத்தி தலைவர்களாக உள்ள சிரேஷ்ட தலைவர்களுக்கு அரசாங்கத்தில் முன்னுரிமை வழங்காத காரணத்தால் அவர்கள் விரக்தியடைந்து கருத்துக்களை குறிப்பிடுவது நியாயமானதே.

சிறீ லங்கா பொதுஜன பெரமுன அரசியலில் பலவீனமடைந்து விட்டது என அரசியலில் வங்குரோத்து நிலையடைந்தவர்கள் கருத்துகளை குறிப்பிடுகிறார்கள். அரசியல் அதிகாரம் எம்மிடமே உள்ளது அதை வெகுவிரைவில் உறுதிப்படுத்துவோம் - என்றார். (ஐ)

## துப்பாக்கி...

மாவட்டம் - காலி நகர பொலிஸ் பிரிவில் தேங்காய் வியாபாரி ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார். வீதியோரத்தில் தேங்காய் விற்பனையில் ஈடுபட்டவர் மீது மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் துப்பாக்கிப் பிரயோகம் செய்து விட்டு தப்பிச் சென்றனர். இதில், 68 வயதான தேங்காய் வியாபாரி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

நேற்றுமுன்தினம் இரவு அம்பாந்தோட்டையில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் நடத்திய துப்பாக்கி சூட்டில் ஒருவர் உயிரிழந்தார். 35 வயதான ஹக்மன கொடிதுவக்குகே சாகர என்பவரே இவ்வாறு உயிரிழந்தார். இவர் தனது மனைவி மற்றும் பிள்ளையுடன் மோட்டார் சைக்கிளில் பயணித்த போதே சுட்டுக் கொல்லப்பட்டார்.

இதேவேளை, தென் மாகாணத்தில் நேற்று நடத்தப்பட்ட தேடுதல் நடவடிக்கையில் ரி 56 கை துப்பாக்கி மற்றும் தோட்டாக்கள் கைப்பற்றப்பட்டதுடன், குற்றச் சம்பவங்களுடன் தொடர்புடைய 84 பேரும் கைது செய்யப்பட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## உயிலங்குளத்தில்...

நிலைமைகளை ஆய்வு செய்தார்.

இதன்போது, கருத்து வெளியிட்ட அவர், மன்னாரில் 5 பௌத்த விகாரைகள் உள்ளன. மடு, முருங்கன், திருக்கேதீஸ்வரம், சௌத்பார், தலைமன்னார் ஆகிய இடங்களில் அவை உள்ளன. ஆனால், இங்கே பௌத்த குடும்பங்கள் ஐம்பதுகூட இல்லை.

பௌத்த மக்கள் இல்லாத பிரதேசத்தில் இராணுவம் புதிதாக பௌத்த ஆலயங்களை அமைக்கும் நடவடிக்கை தொடர்ந்து வருகிறது - இதனைத் தடுப்பது குறித்து அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வேன் என்றும் அவர் கூறினார். (ஐ)

## மாகாண...

தற்போது அந்த விடயங்களை ஞாபகப்படுத்தியுள்ளேன்.

“புதிய ஆளுநர் மாகாணத்தின் முழுமையான அதிகாரங்கள் மத்திய அரசாங்கத்துக்கு செல்லாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும். மாகாணத்திலுள்ள பிரதேச செயளாளர்கள், பொலிஸ் மா அதிபர்களைக்கூட முதல மைச்சரின் அனுமதியோடே நியமிக்கப்பட வேண்டுமென 13ஆம் திருத்தச் சட்டத்தில் வரையறை காணப்படினும் எல்லாம் தலைகீழாக மாறியுள்ளது. எனவே, மாகாணத்திலுள்ள அதிகாரங்களை முழுமையாக பயன்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுமாறு ஆளுநரிடம் கோரிக்கை விடுத்துள்ளோம்”- என்றார். (அ-ஐ)

ஈழநாடு
Eelanadu

### மே 9 தாக்குதல் சம்பவம்:

# அமைச்சர்கள் உட்பட 39 பேரின் மனு நேற்று மீளப் பெறப்பட்டது!

கொழும்பு, மே 23

கடந்த வருடம் மே09 ஆம் திகதி நாடளாவிய ரீதியில் அமைச்சர்கள் மற்றும் அரசியல்வாதிகளின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டமை தொடர்பில் விசாரணை நடத்துமாறு கோரி அமைச்சர்கள் உள்ளிட்ட 39 பேர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு நேற்று மீளப் பெறப்பட்டது.

இந்த மனு நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சார்பில் முன்னிலையான பிரதி சொலிசிட்டர் ஜெனரல், நடந்த சம்பவங்கள் குறித்து முறையான விசாரணை நடத்த நடவடிக்கை எடுப்பதாக தனது கட்சிக்காரர் தெரிவித்ததாக நீதிமன்றத்தில் கூறினார்.

மனுதாரர் தரப்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி சஞ்சீவ ஜயவர்தன, அதில் திருப்தியடைவதாகவும், அதனடிப்படையில் குறித்த மனுவை மீளப் பெறுவதற்கு அனுமதி வழங்குமாறும் கோரினார்.

எனினும், அந்த மனுவில் பிரதிவாதியாக குறிப்பிடப்பட்டிருந்த முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி பைஸர் முஸ்தபா அதற்கு ஆட்சேபனை தெரிவித்தார்.

எனினும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் நிஷங்க பந்துல கருணாரத்ன மற்றும் நீதியரசர் ஏ. மரிக்கார் ஆகியோரடங்கிய மேல்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் குறித்த மனுவை மீளப்பெற அனுமதி அளித்தது. (அ)

# ரூபாவின் பெறுமதி உயர்வு

கொழும்பு, மே 23

இந்த வருடத்தில் கடந்த 19 ஆம் திகதி வரையான காலப்பகுதி வரை அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி 18.7 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.


மேலும், இந்த காலகட்டத்தில், இலங்கை ரூபா பெறுமதி பல முக்கிய வெளிநாட்டு நாணயங்களுக்கு நிகராகவும் அதிகரிப்பை பதிவுசெய்துள்ளது.

அதன்படி, 2023 மே 19 வரையான காலப்பகுதியில் ஜப்பானிய யென்னுக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி 24.1 வீதமாகவும், ஸ்ரேலிங் பவுண்டுடன் ஒப்பிடும்போது 15.4 வீதமாகவும், யூரோ நாணயத்துடன் ஒப்பிடும்போது 17.5 வீதமாகவும், இந்திய ரூபாயுடன் ஒப்பிடும்போது 18.7 வீதமாகவும் உயர்ந்துள்ளது.

அத்துடன், 2022 இல், அமெரிக்க டொலருக்கு எதிராக இலங்கை ரூபாவின் பெறுமதி 44.8 வீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது. (அ)

# சஜித்தை களமிறக்கும் முடிவை எடுக்கவில்லை

### கூறுகிறார் மனோ கணேசன்



கொழும்பு, மே 23

சஜித் பிரேமதாஸவை அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக பெயரிடுவதற்கு ஐக்கிய மக்கள் கூட்டணி இன்னும் எந்தவொரு முடிவையும் எடுக்கவில்லை என குறித்த கூட்டணியில் அங்கம் வகிக்கும் பங்காளிக் கட்சியான தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

எனினும், கட்சியென்ற அடிப்படையில் தமது கட்சி வேட்பாளரை தீர்மானிக்கும் உரிமை ஐக்கிய மக்கள் சக்திக்கு உள்ளது எனவும் மனோ சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன் அடிப்படையிலேயே தமது கட்சி வேட்பாளரை ஐக்கிய மக்கள் சக்தி தெரிவு செய்திருக்கக்கூடும் எனவும் மனோ சுட்டிக்காட்டினார்.

எனினும், ஐக்கிய மக்கள் கூட்டணி அவ்வாறானதொரு முடிவை எடுக்கவில்லை எனவும் குறிப்பிட்டார்.

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளராக சஜித் பிரேமதாவை களமிறக்குவதற்கு ஐக்கிய மக்கள் சக்தியின் செயல்குழு அனுமதி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# யாழ்ப்பாணத்துக்கு குடிதண்ணீரை கொண்டுவர நடவடிக்கை எடுங்கள்!

## புதிய ஆளுநரிடம் சீ.வீ.கே கோரிக்கை



யாழ்ப்பாணம், மே 23

“யாழ்ப்பாணத்துக்கான குடிதண்ணீர்த் திட்டத்தை நடைமுறைப்படுத்த ஜனாதிபதியுடன் பேசி உரிய நடவடிக்கை எடுங்கள். குறிப்பாக இரணைமடுவில் இருந்து குடிதண்ணீர் கொண்டு வருவதாக இருந்தது. ஆனால் தற்போது அது சாத்தியமற்ற விடயமாகிவிட்டது. யாழ்ப்பாண மக்களுக்கு தேவையான குடிதண்ணீரைக் கொண்டு வரக்கூடிய நடவடிக்கையை நீங்கள் உடன் செயற்படுத்துங்கள்.”

- இவ்வாறு நேற்று புதிதாக பதவியேற்ற வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சாள்ஸிடம் கோரிக்கை விடுத்தார் வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம்.

வடக்கு மாகாண ஆளுநரின் கடமைகளைப் பொறுப்பேற்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எங்கள் இலக்குகள், அபிலாசைகள் என்ன என்பதை நாங்கள் சொல்லித்தான் உங்களுக்கு தெரிய வேண்டியது இல்லை. நீங்கள் எங்களில் ஒருவர். இரண்டு விடயங்களை நான் சொல்லவேண்டிய நிலையில் உள்ளேன்.

13ஆவது திருத்தச் சட்டத்தைப் பற்றிப் பேசுகின்றோம். நான் அதற்கு மேலாக என்னுடைய கருத்தை தெரிவிக்க விரும்புகின்றேன்.

13 இன் படி நீங்கள் கொஞ்சம் தெளிவாகவும் இறுக்கமாக இருப்பீர்கள் என நாங்கள் நம்புகின்றோம்.

அந்த வகையில் இருக்கின்ற பல விடயங்கள் பிடுங்கப்பட்டுள்ளன. அவற்றை எவ்வாறு மீளப் பெறலாம் என்பது பற்றி நான் சொல்லிதான் தெரியவேண்டியதில்லை. அது உங்களுக்கு தெரிந்த விடயமே.

சில ஆளுநர்கள் நிர்வாகத் திறன் அற்றவர்களாகவும் மாகாண முறை தெரியாதவர்களாகவும் இருக்கிறார்கள். ஆனால் உங்களுக்கு மாகாண அனுபவம் உண்டு. ஆகவே எடுத்த விடயங்கள், எடுக்கப்பட்ட விடயங்கள் அல்லது பிடுங்கப்பட்ட விடயங்களை திருப்பிப் பெறுவதிலே உங்கள் முயற்சி காணப்படவேண்டும்.

மாகாணத்துக்குரியதாக இருப்பதை மத்தி எடுப்பதை நாங்கள் தவிர்க்கவேண்டும். அது தொடர்ச்சியாக நடந்து கொண்டிருக்கின்றது. மாகாணத்துக்குட்பட்ட விடயங்கள் எடுக்கப்படுபவற்றை தடுக்கவேண்டும்.

எமது வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த பெண்மணி நீங்கள். எனவே இங்குள்ள அதிகாரிகளும் உங்களுக்கு ஒத்துழைப்பார்கள்.

எனவே வடக்கு மாகாண மக்களுக்கு உங்களால் முடிந்தளவு உதவுங்கள்.

அதேபோல யாழ்ப்பாணத்துக்கான குடிதண்ணீர்த் திட்டத்தை நடைமுறைப்படுத்த ஜனாதிபதியுடன் பேசி உரிய நடவடிக்கை எடுங்கள். குறிப்பாக இரணைமடுவில் இருந்து குடி தண்ணீர் கொண்டு வருவதாக இருந்தது. ஆனால் தற்பொழுது சாத்தியமற்ற விடயமாகிவிட்டது.

யாழ்ப்பாண மக்களுக்கு தேவையான குடிதண்ணீரைக் கொண்டு வரக்கூடிய நடவடிக்கையை நீங்கள் உடன் செயற்படுத்துங்கள். அதற்கு நாங்கள் எங்களாலான பூரண ஒத்துழைப்பை வழங்குவோம் - என்றார். (அ)

# வட மாகாண ஆளுநரின் பதவியேற்பில் பங்கேற்காத யாழ்.மாவட்ட எம்.பிக்கள்

யாழ்ப்பாணம், மே 23

வடக்கு மாகாண ஆளுநரின் நேற்றைய பதவியேற்பு நிகழ்வில் யாழ். மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் எம்.பிக்கள் எவரும் பங்கேற்கவில்லை.

வடக்கு மாகாண ஆளுநராக புதிதாக நியமிக்கப்பட்ட திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸ் கடமைகளை பொறுப்பேற்கும் நிகழ்வு நேற்று ஆளுநர் செயலத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் யாழ்.மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் எவரும் கலந்துகொள்ளவில்லை.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் திணைக்களத் தலைவர்கள், துறை சார் அமைச்சுக்களின் செயலாளர்கள் பங்குபற்றியிருந்த நிலையில் யாழ்.மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் எவரும் கலந்துகொள்ளவில்லை.

எனினும் வன்னி மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்களான சாள்ஸ் நிர்மலநாதன் மற்றும் வினோ நோகராதலிங்கம் ஆகியோர் மட்டுமே கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# எனக்கு உயிர் அச்சுறுத்தல்!

### கூறுகிறார் அமைச்சர் டிரான் அலஸ்



கொழும்பு, மே 23

தனது உயிர் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள் ளதாக புலனாய்வுப் பிரிவினர் அறிக்கை வழங்கியுள்ள னர் என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்.

பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சில் நேற்று நடை பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அச்சுறுத்தல் ஏற்படலாம் என எனக்கு புலனாய்வு அறிக்கை கிடைத்துள்ளது. அப்படியான அச்சுறுத்தல் இருந்தாலும் சேவையாற்றவே நான் இந்த பதவியை பொறுப்பேற்றுள்ளேன்.

நான் இந்த இடத்தில் இருக்கும் வரை போதைப் பொருட்களை கைப்பற்றுவது, பாதாள உலகக் குழுக்களை ஒழிப்பதைச் செய்ய வேண்டும். இதனால் எனது உயிருக்கு அச்சுறுத்தல் இருக்கலாம்.

எமது பாதுகாப்பைக் கவனத்தில் கொண்டு பணியாற்ற நாம் அறிந்துகொள்ளவேண்டும். அச்சுறுத்தல் இருக்கின்றது என்பதற்காக ஒரு அடியைக் கூட பின் நோக்கி வைக்கமாட்டேன்.

ஒரு அடியை முன்நோக்கி வைப்பேனே அன்றி பின் நோக்கி வைக்கமாட்டேன் - என்றார். (அ)

# இலங்கையில் சூரிய சக்தியில் இயங்கும் பொது போக்குவரத்து சேவை விரைவில்!

கொழும்பு, மே 23

சிறகு இல்லாமல் பறக்கச் சொல்கிறார்கள், ஆனால் நான் 2030 இல் சூரிய மின்சாரத்தில் இயங்கும் பொது போக்குவரத்து சேவையை தொடங்குவேன் என்று போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

பசறை பல்கஹதென்ன ஊவா முகாமைத்துவ அபிவிருத்தி நிலையத்தில் நடைபெற்ற மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து சேவை அதிகார சபையின் வருடாந்த தலைவர் மாநாட்டில் கலந்துகொண்ட அமைச்சர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இனிமேல் புதைபடிவ எரிபொருளில் வாகனங்கள் இயங்க முடியாது, சுற்றுச்சூழலும் அழிக்கப்படுகிறது. அம்பாந்தோட்டை விற்பனை மூலம் 1.4 பில்லியன் டொலர் கிடைத்தது. சீனாவிலிருந்து போர்ட் சிற்றிக்கு 1.4 பில்லியன் டொலர் கிடைத்தது.

ஆனால் எரிபொருளைக் கொண்டு வர எங்களுக்கு ஆண்டுக்கு 05 பில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவாகும். இது 2030 ஆம் ஆண்டளவில், இலங்கையில் அனைத்து பஸ்களும் ரயில்களும் ஏன் சூரிய சக்தியில் இயங்கும் வகையில் பொதுப் போக்குவரத்துச் சேவை செயல்படுகிறது.

எந்த அமைச்சரும் பெறாத வரதட்சணையை நான் பெற்றுள்ளேன். என் அமைச்சுக்கு எரிபொருள் இல்லை. ஆனால் என்னை வேகமாக ஓடச் சொல்கிறார்கள்.

சிறகு இல்லாமல் பறக்கச் சொல்வது போல் இருக்கிறது. ஜனாதிபதி என்னிடம் முன்வைத்த 12 பிரேரணைகளில் பணச்செலவு இல்லாத சகல பிரேரணைகளும் மூன்று மாதங்களுக்குள் நடைமுறைப்படுத்துவேன் - என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 23.05.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.